APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE, MADRAS.
(Vide Consolidated list dated 2-6-'36 Page 134.)

MALAVAI-MAHALINGA AYYAR'S

# TAMIL GRAMMAR

**Revised and arranged to suit the Lower Forms**

V. S. SWAMINATHAN,
PUBLISHER & BOOK-SELLER.
MADRAS, MADURA & TINNEVELLY

All Rights Reserved] [Price

உ

மழவை - மகாலிங்க ஐயரவர்கள்

இயற்றிய

# தமிழ் இலக்கணம்

மாணவர்க்குரிய திருத்தமான பதிப்பு

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

ஸ்ரீ

வி. சூ. சுவாமிநாதன்

புஸ்தக வியாபாரி

மதராஸ், மதுரை & திருநெல்வேலி

திப்புரிமை]

[விலை அணா

# முன்னுரை

இவ் விலக்கண நூல் இயற்றிய மகாலிங்க ஐயர், புதுக் கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்த மழவராயனேந்தல் (இதை மழவை என்றும் சொல்லுவார்கள்) என்னும் ஊரிற் பிறந்த சிறந்த பிராமணர். சைவமதத்தினர். திருத்தணிகை விசாகப்பெருமாளையர், சரவணப் பெருமாளையர்என்னும்வித்வ சிரோமணிகளை யடுத்துக் கல்வி பயின்றவர். சகல கலைகளிலும் வல்லுநராக விளங்கியவர். ஆனதுபற்றி, அரசாங்கத்தாரால் ஆதரிக்கப்பெற்றனர். இவர் Old College எனும் பழங் கல்லூரியில்,மகாவித்வான் தாண்டவராய முதலியா ரவர்கட் குப் பின், தமிழாசிரியாராக விருந்ததாகத் தெரியவருகிறது. சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன் இருந்த இவரது விரிவான சரித்திரம் கிடைத்தற் கரிதா யிருப்பது வருந்தத் தக்கதே.

நம் ஐயாவர்கள் பெரிய புராணத்தில் முதல் தொள்ளா யிரம் செய்யுள்களுக்கு அரிய உரையும், அருணாசலப் புரா ணத்துக்கு உரையும், மழவைச் சிங்கார சதகம் முதலிய நூல் களும் இயற்றியுள்ளார். இவர் இளைஞர்க்கென்றே இயற்றிய இவ் விலக்கணம் இன்றும் இளஞ் சிறுர்க்கு இன்றியமையாத தாய் இருக்கின்றது.

அதனை நம் மாணவர்க்குப் பெரிதும் பயன்படுமாறு, அவசியமான சில சீர்திருத்தங்களுடன் பதிப்பித்துள்ளோம். ஆங்காங்கு ஆங்கிலக் குறிப்புக்களும் அமையப்பெற்று விளங் கும் இதனை ஆசிரியரும் மாணவரும் ஏனையோரும் ஆதரிக்கு மாறு வேண்டுகின்றனம்.

# அட்டவணை—CONTENTS

பக்கம்

1. எழுத்தியல். ... 5

எழுத்தின் பெயரும் எண்ணும்; உயிரெழுத்து; மெய்யெழுத்து; சுட்டெழுத்து; வினாவெழுத்து; இனவெழுத்து; உயிர்மெய்யெழுத்து; ஆய்தம்; குற்றியலுகரம்; முற்றியலுகரம்; மாத்திரை; மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்; மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துக்கள்; போலி; சாரியை.

2. பதவியல். ... 14

பகாப்பதம்; பகுபதம்; வினைப்பகுதிகள்; விகுதிகள்; வினைமுற்று விகுதிகள்; பெயர் விகுதிகள்; பெயரெச்ச விகுதிகள்; வினையெச்ச விகுதிகள்; தொழிற்பெயர் விகுதிகள்; பண்புப்பெயர் விகுதிகள்; பெயர்ப் பகுபதம்; வினைப்பகுபதம்; இடைநிலை.

3. வடசொல். ... 20

4. புணரியல். ... 21

வேற்றுமைப் புணர்ச்சி; அல்வழிப் புணர்ச்சி; உடம்படுமெய்.

5. பெயரியல். ... 44

சொற்களின் வகை; திசைச்சொல்; வடசொல்; திணை; பால்; இடம்; எண்; இயற்சொல்லும் திரிசொல்லும்; இயற்சொல்;

திரிசொல்; வழக்கு; இயல்பு வழக்கு; இலக்கணமுடையது; இலக்கணப்போலி; மரூஉ; தகுதி வழக்கு; இடக்கரடக்கல்; மங்கலம்; குழூஉக்குறி; குறிப்பு; ஆகு பெயர்; வேற்றுமைகள்; இரண்டாம் வேற்றுமை; மூன்றும் வேற்றுமை; நான்காம் வேற்றுமை; ஐந்தாம் வேற்றுமை; ஆறும் வேற்றுமை; ஏழாம் வேற்றுமை; எட்டாம் வேற்றுமை.

6. வினையியல். ... 61

வினைச்சொல்; செயப்படுபொருள் குன்று வினை; செயப்படுபொருள் குன்றிய வினை; தெரிநிலைவினை; செய்வினை; செயப்பாட்டு வினை; முற்றுவினை; குறிப்புவினை.

7. பொதுவியல். ... 73

தொகைநிலைத் தொடர்; வினைத்தொகை; பண்புத்தொகை; உவமைத்தொகை; உம்மைத் தொகை; அன்மொழித் தொகை; தொகாநிலைத்தொடர்; வழு; வழுவமைதி; திணைவழுவமைதி; எண்வழுவமைதி; இட வழுவமைதி; காலம்; காலவழுவமைதி; வினு; விடை; மரபு.

8. இடையியல். ... 88

9. உரியியல். ... 89

10. சொற்றெடரியல். ... 90

வாக்கியம்; எழுவாய்; பயனிலை; செயப்படு பொருள்; வாக்கியவகைகள்.

மழவை - மகாலிங்க ஐயரவர்கள்

இயற்றிய

# தமிழ் இலக்கணம்

## எழுத்தியல்—ON LETTERS

### எழுத்தின் பெயரும் எண்ணும்

**1.** மொழிக்கு முதற்காரணமாகிய ஒலிக்கு, வரிவடிவின் அறிகுறியே எழுத்தாகும்.

**2.** அவ்வெழுத்து முதலெழுத்தென்றும், சார்பெழுத்தென்றும் இருவகைப்படும்.

**3.** உயிரும் மெய்யும் முதலெழுத்தென்றும், உயிர்மெய்யும் ஆய்தமும் சார்பெழுத்தென்றும் சொல்லப்படும்.

**4.** எழுத்து—உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம் என நான்கு வகைப்படும்.

**5.** உயிரெழுத்துப் பன்னிரண்டு, மெய்யெழுத்துப் பதினெட்டு, ஆய்தம் ஒன்று, உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு ஆம்.

### உயிரெழுத்து—Vowels

**6.** உயிரெழுத்துப் பன்னிரண்டு. அவை—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பனவாம்.

*இவை பிற எழுத்துக்களின் உதவியின்றித் தாமே உச்சரிக்கப் படுவதால் உயிரெழுத் தெனப்பட்டன.*

**7.** உயிரேழுத்து *குறில், நெடில் என இருவகைப்படும். (குறில்—குறுகிய ஓசையையுடைய எழுத்து; நெடில்—நீண்ட ஓசையை யுடைய எழுத்து.)*

**8.** அ, இ, உ, எ, ஒ இவ்வைந்துங் *குற்றெழுத்துக்களாம்.*

**9.** ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இவ்வேழும் *நெட்டெழுத்துக்களாம்.*

## மெய்யெழுத்து—Consonants

**10.** மெய்யெழுத்துப் பதினெட்டு. *அவை*—**க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன், என்பனவாம்.**

*உயிரெழுத்துக்களின் உதவியின்றித் தாமே தனித்து உச்சரிக்கப் படாமையின் மெய்யெழுத் தெனப்பட்டன.*

*எப்படி ஒரு உடம்பானது உயிரில்லாவிடின், இயங்காதோ அப்படியே மெய்யெழுத்துக்களும் உயிரெழுத்துக்களில்லாமல் இயங்கமாட்டா.*

**11.** மெய்யெழுத்து *வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும்.*

**12.** க, ச ட, த, ப, ற *என்ற இவ்வாறும் வல்லினமாம். இவை வலிய ஓசையுடன் உச்சரிக்கப்படுதலால் இப்பெயர் பெற்றன.*

**13.** ங, ஞ, ண, ந, ம, ன *என்ற இவ்வாறும் மெல்லினமாம்.*

*இவை மெல்லிய ஓசையுடன் உச்சரிக்கப்படுதலால் இப்பெயர் பெற்றன.*

**14.** ய, ர, ல, வ, ழ, ள என்ற இவ்வாறும் இடையினமாம்.

இவை வலிய ஓசையும் மெல்லிய ஓசையுமின்றி, அவ்விரண்டிற்கும் நடுத்தரமான ஓசையுடன் உச்சரிக்கப்படுதலால் இப்பெயர் பெற்றன.

## சுட்டெழுத்து—Demonstrative Letters

**15.** அ, இ, உ இம்மூன்றும் சொல்லுக்கு முதலில் அகத்துறுப்பாகவேனும் புறத்துறுப்பாகவேனும் நின்று சுட்டுப் பொருளைத் தருமாயின் சுட்டெழுத்தெனப்படும்.

உ-ம். அவன், இவன், உவன்—அகச்சுட்டு.
அக்குதிரை, இவ்வீடு, உப்பக்கம்—புறச்சுட்டு.

அகரம் தூரத்திலுள்ள பொருளையும், இகரம் சமீபத்திலுள்ள பொருளையும், உகரம் நடுவிலுள்ள பொருளையும் காட்டும்.

**16.** அவன் என்பதிலுள்ள அகரம் போலச் சொல்லிற்கு உள்ளாகவே ஓரெழுத்தாய் அமைந்து சுட்டுப்பொருள் தந்து நிற்பது அகச்சுட்டு.

**17.** அக்குதிரை என்பதிலுள்ள அகரம்போலச் சொல்லிற்கு வெளியே இருந்து பிரித்த காலத்துச் சுட்டெழுத்தும் மற்றைப் பகுமாகிய இரண்டும் பொருள் தந்து நிற்பது புறச்சுட்டு.

அம்பு, இலை, உடு முதலிய சொற்களிலுள்ள அகர, இகர, உகரங்கள் ஒரு பொருளையுங் குறித்துக் காட்டாமையினால் அவை சுட்டெழுத்துக்கள் ஆகமாட்டா.

## வினாவெழுத்து—Interrogative Letters

**18.** ஆ, எ, ஏ, ஓ என்னும் இந்நான்கு உயிரும், யா என்னும் உயிர் மெய்யும் சொற்களிடத்து நின்று வினாப் பொருளில் வந்தால் வினா எனப்படும்.

அகச்சுட்டு, புறச்சுட்டு, என்பனபோல, வினவின் கண்ணும் அகவினு புறவினு என்பன உண்டு.

**19.** ஆ, ஓ, சொல்லிற்கு ஈற்றில் புறத்துறுப்பாகவும், ஏ முதலில் அகத்துறுப்பாகவும், ஈற்றில் புறத்துறுப்பாகவும், எ முதலில் அகத்துறுப்பாகவும் புறத்துறுப்பாகவும் நின்று வினப்பொருளைத் தரும்.

உதாரணம்

தச்சனு=(தச்சன் + ஆ)<br>
தச்சனோ=(தச்சன் + ஓ)<br>
பொன்னனே=(பொன்னன் + ஏ) } ஆ, ஓ, ஏ ஈற்றில் புறத்துறுப்பாக வந்தன.

எவன்<br>
ஏவன் } எ, ஏ முதலில் அகத்துறுப்பாக வந்தன.

எத்தச்சன் (எ + தச்சன்) எ முதலில் புறத்துறுப்பாக வந்தது.

**20.** யா என்னும் உயிர்மெய்யெழுத்து, சொல்லுக்கு முதலில் அகத்துறுறுப்பாகவேனும், புறத்துறுப்பாகவேனும் நின்று வினப்பொருளைத் தரும்.

உ-ம். யாவன்<br>
யாங்ஙனம் } யா முதலில் அகத்துறுப்பாகவும் புறத்துறுப்பாகவும் வந்தது.

## இன வெழுத்துக்கள்—Related Letters

**21.** அகரத்திற்கு ஆகாரமும், இகரத்திற்கு ஈகாரமும், உகரத்திற்கு ஊகாரமும், எகரத்திற்கு ஏகாரமும், ஐகாரத்திற்கு இகரமும், ஒகரத்திற்கு ஓகாரமும், ஔகாரத்திற்கு உகரமும், ககரத்திற்கு ஙகரமும், சகரத்திற்கு ஞகரமும், டகரத்திற்கு ணகரமும், தகரத்திற்கு நகரமும், பகரத்திற்கு மகரமும், றகரத்திற்கு னகரமும் இனவெழுத்தென்று சொல்லப்படும், இடையினம் ஆறும் ஓரினமாம்.

## உயிர்மெய்யெழுத்து—Vowel-Consonants

**22.** உயிர்மெய்யெழுத்தாவது உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் எழுத்து. உயிர்மெய்யெழுத்து இருநூற்றுப் பதினாறு.

ஒரு மெய் எழுத்தோடு பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் தனித்தனியே சேருவதனால் பன்னிரண்டு உயிர்மெய்யெழுத்துக்கள் உண்டாகின்றன. அவ்வாறே 18 மெய்களோடும் தனித்தனியே 12 உயிர்களும் கூடுவதனால் 18×12=216 உயிர்மெய்யெழுத்துக்கள் உண்டாகின்றன.

| | | | |
|---|---|---|---|
| உ - ம். | க்+அ=க | க்+உ=கு | க்+ஐ=கை |
| | க்+ஆ=கா | க்+ஊ=கூ | க்+ஒ=கொ |
| | க்+இ=கி | க்+எ=கெ | க்+ஓ=கோ |
| | க்+ஈ=கீ | க்+ஏ=கே | க்+ஔ=கௌ |

## ஆய்தம்

**23.** ஆய்தம் குற்றெழுத்துக்குப் பின்னும் உயிரொழுத்தோடு சேர்ந்த வல்லெழுத்துக்கு மேலும் வரும்.

உ - ம். அஃது, எஃகு, இருபஃது.

**24.** உகரம், மாத்திரையின் சுருக்கத்தாலும் இயல்பாலும், குற்றியலுகரம், முற்றியலுகரம் என இருவகைப்படும்.

## குற்றியலுகரம்—The Short உ.

**25.** ஒரு குற்றெழுத்தினாலும் இணைந்து வரும் இரண்டு குற்றெழுத்துக்களினாலும் ஆக்கப்படாத மொழியீற்று வல்லின மெய்யின்மேல் ஏறிய உகரம் குற்றியலுகர மெனப்படும்.

**26.** அஃது ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தை* நோக்கி நெடிற்றொடர், உயிர்த்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர் என அறுவகைப்படும்.

---

* ஈற்றெழுத்துக்கு அயலெழுத்து=ஈற்றயலெழுத்து=கடைசி எழுத்துக்கு முந்திய எழுத்து.

**27.** ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து உயிரும் உயிர் மெய்யுமாகிய நெடில்களுளொன்றாகவரின் அது நெடிற்றொடராம்.

உ - ம். நாகு, காசு, காடு, சூது, வெளபு, ஏறு.

**28.** ஒரு மொழியின் ஈற்றயலெழுத்துத் தனி நெட்டெழுத்தாகாமல் உயிரும் உயிர் மெய்யுமாகிய குறில் நெடில்களுள் ஒன்றாகவரின் அது உயிர்த்தொடராம்.

உ - ம். அலகு, அரைசு, குருடு, தறுது, மரபு, களிறு.

**29.** ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து மெல்லினமாகவரின் அது மென்றொடராம்.

உ - ம். பங்கு, பஞ்சு, வண்டு, பந்து, வம்பு, நன்று.

**30.** ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து இடையினமாகவரின் அது இடைத்தொடராம்.

உ - ம். செய்து, பல்கு, சார்பு, தெள்கு, போழ்து.

**31.** ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து ஆய்தமாகவரின் அது ஆய்தத்தொடராம்.

உ - ம். எஃது, கஃசு, கஃடு, பஃது, அஃபு, கஃறு.

## முற்றியலுகரம்—The Full உ.

**32.** தனித்தும், தனிக்குற்றெழுத்தைச் சார்ந்துமுள்ள வல்லின மெய்களின் மேலும் மெல்லின இடையின மெய்களின் மேலும் வருகின்ற உகரம் முற்றியலுகரமாம்.

உ - ம். கு, து, படு, பசு, தாணு, உருமு.

## மாத்திரை—Time unit of Letters

**33.** எழுத்துக்கள் உச்சரிக்கப்படுகின்ற கால அளவு மாத்திரை என்று சொல்லப்படும்.

**34.** கண்ணிமைப் பொழுதும் கைநொடிப்பொழுதும் மாத்திரைக்கு அளவாம்.

**35.** குற்றெழுத்துக்கு மாத்திரை ஒன்று; நெட்டெழுத்திற்கு மாத்திரை இரண்டு. மெய்யெழுத்துக்கும், குற்றியலிகரத்துக்கும், குற்றியலுகரத்துக்கும், ஆய்தத்துக்கும் தனித்தனி மாத்திரை அரையாம்.

**36.** உயிர் மெய்க்கு மெய்ம்மாத்திரை ஒழிய ஏறிய உயிர் மாத்திரையே மாத்திரையாம். எனவே, உயிர்மெய்க் குற்றெழுத்துக்கு ஒரு மாத்திரை எனவும், உயிர்மெய் நெட்டெழுத்துக்கு இரண்டு மாத்திரை எனவும் கொள்ளவேண்டும்.

**37.** பண்டமாற்றிலும், விளியிலும், இசையிலும், புலம்பலிலும், உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் தமக்குச் சொன்ன அளவைக் கடந்து நீண்டொலிக்கும்.

## மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள்—Initial Letters

**38.** உயிரெழுத்துப் பன்னிரண்டும் க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ என்னும் ஒன்பது உயிர்மெய்யெழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும்.

உ-ம். அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடல், எடு, ஏடு, ஐயம், ஒதி, ஓதி, ஔவியம்.

**39.** ஒன்பது மெய்களிற் க, ச, த, ந, ப, ம என்னும் இவ்வாறு மெய்யெழுத்துக்களும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களோடுங் கூடி மொழிக்கு முதலாக வரும்.

உ-ம். கடு, கால், கிள்ளை, கீழ்மை, குடில், கூந்தல், கொண்டை, கேழல், கைதவம், கொற்றவன், கோட்டம், கௌவை,

சம்பு, சார்பு, சீயம்; சுகம், சூடகம், செப்பம், சேதகம், சைவம், சொல், சோம்பல், சௌரியம்.

தங்கை, தாளாண்மை, திசை, தீமை, துடி, தூய்மை, தெற்கு, தேயம், தையம், தோயம், தௌவை.

நன்மை, நாடு, நிலம், நீர், நுரை, நூல், நெல், நேர்மை, நைதல், நொடி. நோன்பு, நௌவி.

பதி, பாயல், பிதிர், பீழை, புகழ், பூமி, பெண், பேதை, பையன், பொறுமை, போது, பௌவம்.

மதி, மாளிகை, மின், மீன், முன், மூங்கில், மென்மை, மேன்மை, மையல், மொழி, மோதல், மௌவல் என வரும்.

**40.** வகரம் அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்னும் எட்டு உயிரெழுத்துக்களோடும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

உ-ம். வளி, வாழை, விளி, வீடு, வெளி, வேலை, வையம், வௌவால்.

**41.** யகரம் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறு உயிரெழுத்துக்களோடும், சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

உ-ம். யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்.

**42.** ஞகரம் அ, ஆ, இ, எ, ஒ என்னும் ஐந்து உயிரெழுத்துக்களோடும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்.

உ-ம், ஞமலி, ஞாயிறு, ஞிமிறு, ஞெண்டு, ஞொள்கிற்று.

## மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துக்கள்—Final Letters

**43.** அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் பதினொரு உயிரெழுத்துக்களும், ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொரு மெய்யெழுத்துக்களுமாகிய இருபத்திரண்டு எழுத்துக்களும் மொழிக்கு ஈற்றில் வரும்.

உ-ம். பல, பலா, இடி, தீ, பந்து, பூ, சே, மனை, நொ, போ, கௌ, உரிஞ், மண், வெந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், காழ், புள் என வரும்.

## போலி—Interchange of Letters

**44.** சில வார்த்தைகளில் ஓரெழுத்து நிற்க வேண்டிய இடத்தில் வேறோரெழுத்து நிற்றலுமுண்டு. அது போலி எனப்படும்.

**45.** இவற்றுள் இரண்டு குற்றெழுத்துக்களை யடுத்த அஃறிணைப் பெயரினிறுதியிலிருக்கின்ற மகரத்திற்கு னகரம் போலியாக வரும்.

உ - ம். பலம்—பலன். முகம்—முகன்.

**46.** அகரத்திற்கு முன் யகரமும் இகரமும் சேர்ந்து வந்தாலும், யகரம் மாத்திரம் வந்தாலும் ஐகாரத்தை யொத்து ஒலிக்கும்.

உ - ம். வைத்தியன்—வயித்தியன், ஐயம்—அய்யம்.

**47.** அகரத்திற்கு முன் வகரமும் உகரமும் சேர்ந்து வந்தாலும், வகரம் மாத்திரம் வந்தாலும் ஔகாரத்தை ஒத்து ஒலிக்கும்.

உ - ம். பௌத்தர்—பவுத்தர், ஔவை—அவ்வை.

**48.** சில சொற்களின் முதலில் நகரத்திற்கு ஞகரம் போலியாக வரும்.

உ - ம். நாயிறு—ஞாயிறு, நயம்—ஞயம்.

**49.** சில சொற்களின் இடையில் உள்ள தகரத்திற்குச் சகரம் போலியாக வரும்.

உ - ம். பித்து—பிச்சு, வைத்த—வைச்ச.

**50.** சில சொற்களின் இடையில் நகர தகரங்களுக்கு ஞகர சகரங்கள் முறையே போலியாகவரும். அச்சொற்களின் முதலில் ஐகாரம் இருந்தால் அதற்கு அகரம் போலியாகவரும்.

உ - ம். உய்ந்தனன்–உய்ஞ்சனன், நீந்தினன்–நீஞ்சினன்.
ஐந்து—அஞ்சு, மைந்தன்—மஞ்சன்.

**51.** தொடர்மொழி ஐகாரத்தின் கீழ்நின்ற நகரத்திற்கு ஞகரம் போலியாக வரும்.

உ - ம். ஐந்நூறு—ஐஞ்ஞூறு.

**52.** சில சொற்களின் ஈற்று லகரத்திற்கு ரகரமும், சில குற்றியலுகரங்களுக்கு அர் என்பதும் போலியாக வரும்.

உ - ம். பந்தல்—பந்தர், சுரும்பு—சுரும்பர், வண்டு-வண்டர்.
சிறகு—சிறகர், இடக்கு—இடக்கர்.

சாரியை

## Particles used in the pronunciation of Letters

**53.** மெய்யெழுத்துக்கள் அகரச்சாரியையும், உயிர் நெட்டெழுத்துக்கள் காரச்சாரியையும், உயிர்க்குற்றெழுத்தும் உயிர்மெய்க் குற்றெழுத்தும், கரம், காரம் என்னும் இரண்டு சாரியைகளையும் பெறும்.

உ - ம். க, ங எனவும், ஆகாரம், ஐகாரமெனவும்; அகரம் மகம், அகாரம், மகாரமெனவும் வரும்.

**54.** மெய்யெழுத்துக்கள் சாரியை பெருமலும், உயிர் மெய் நெடில் சாரியை பெற்றும் வருவன அல்ல.

எழுத்தியல் முற்றிற்று.

---

## பதவியல்—ON WORDS

**55**. எழுத்துக்கள் தனித்து நின்றுவது இரண்டு முதலாகத் தொடர்ந்து நின்றுவது ஒரு பொருளைத் தெரிவித்தால் பதமெனப்படும். அது பகாப்பதமெனவும், பகுபதமெனவும் இருவகைப்படும்.

### பகாப்பதம்—Simple Words

**56.** பகாப்பதமாவது, சொல்லைப் பகுத்தலாற் பகுதி, விகுதி முதலாகிய பிரயோஜன மில்லாமல் ஒரு பொருளைக் காட்டுவதற்கு ஏற்படுத்திய சொல்லாம்.

| | | | |
|---|---|---|---|
| உ - ம். | பெயர்ப் பகாப்பதம் | ... | கா, மண். |
| | வினை ,, | ... | வா, உண். |
| | இடை ,, | ... | ஏ, மற்று, |
| | உரி ,, | ... | மா, நனி. |

## பகுபதம்—Compound Words

**57.** பகுபதமாவது சொல்லைப் பகுக்கும்போது பகுதிக்கும் விகுதிக்கும் வேறு பொருளுண்டாகி ஒரு பொருளைத் தெரிவிப்பதாம்.

**58.** பகுபதம் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் இவ்வாறு உறுப்புக்களையும் பெற்றும், பகுதி விகுதிகள் அல்லாத மற்ற உறுப்புக்களிற் சில பெறாதும் வரும்.

| உ-ம். | ப | ச | இ | சா | வி |
|---|---|---|---|---|---|
| கூனி+ | கூன்+ | — | — | — | இ |
| அறிஞன் | அறி+ | — | ஞ்+ | — | அன் |
| உண்டான்+ | உண்+ | — | ட்+ | — | ஆன் |
| உண்டனன் | உண்+ | — | ட்+ | அன்+ | அன் |
| பிடித்தனன் | பிடி+ | த்+ | த்+ | அன்+ | அன் |
| நடந்தனன் | நட+ | த்+ | த்+ | அன்+ | அன் |

நடந்தனன் என்பதில் சந்தியால் வந்த தகரவொற்று நகர மெல்லொற்றாகத் திரிதலாகிய விகாரத்தையும் பெற்று ஆறு உறுப்பால் முடிந்தது காண்க.

## வினைப்பகுதிகள்—Verbal Roots

**59.** நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண், பொருந், திரும், தின், தேய், பார், செல், வவ், வாழ், கேள் என்ற இருபத்திரண்டு ஈற்றினையுடையனவும் தெரிநிலைத் தன்வினைப் பகுதிகளாகும்.

**60.** மேலே கூறிய பகுதிகளின் மேல் வி, பி, து, சு, என்ற நான்கு விகுதிகளும்வந்தால், பிறவினைப்பகுதிகளாகும்.

| உ - ம். | தன்வினை | பிறவினை | | |
|---|---|---|---|---|
| | கொல் | கொல்வி | வி | விகுதி பெற்றது |
| | நட | நடப்பி | பி | ,, |
| | நட | நடத்து | து | ,, |
| | பாய் | பாய்ச்சு | சு | ,, |

**61.** சில பகுதிகளின் இடையிலிருக்கும் மெல்லொற்று வல்லொற்றாகத் திரிந்து வருதலாலும், நடுவில் ஒரு ஒற்றுத் தோன்றுதலாலும் பிறவினையாதலுமுண்டு.

உ - ம். எழும்பு—எழுப்பு, உருகு — உருக்கு } என வரும்.

## விகுதிகள்—Terminations

**62.** அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார், து, அ, ஆ, என், ஏன், அல், அம், ஆம், எம், ஏம், ஓம், ஐ, ஆய், இர், ஈர், க, இய, உம், இ, உ, தல், கை, பு, வி, உள், தி, சி, மன், மான், கள், தை, பி, ய், ள், ண், ஆல், மல், மே, கால், றி, று, வை, பாடு, கு, மை, காடு, இவ்வைம்பத்து நான்கும் பிறவும் விகுதிகளாம்.

## வினைமுற்று விகுதிகள்

**63.** அன, ஆன், அள், ஆள், அர், ஆர், து, அ, ஆ, ஐ, ஆய், இர், ஈர், ஏன், அம், ஆம், ஏம், ஓம், உம், க. இவ்விருபதும் பிறவும் வினைமுற்று விகுதிகளாம்.

உ - ம். கடந்தனன், கடந்தான், கடந்தனள், கடந்தாள், கடந்தனர், கடந்தார், கடந்தது, கடந்தன, கடவா, கடந்தனை, கடந்தாய், கடந்தனிர், கடந்தீர், கடந்தேன், கடந்தனம், கடந்தாம், கடந்தேம், கடந்தோம், கடக்கும், கடக்க என வரும்.

## பெயர் விகுதிகள்

**64.** *அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, அ, இ, மார், மன், மான், கள், வை, கை, பி, ன், ள், ர்* இப்பத்தொன் *பதும்* பெயர் விகுதிகளாம்.

உ - ம். *குழையன், வானத்தான், குழையள், வானத்தாள், குழையர், வானத்தார், யாது, குழையன, பொன்னி. தேவிமார், வடமன், கோமான், கோக்கள், அவை, தங்கை, தம்பி, பிறன், மகள், பிறர் என வரும்.*

**65.** அ, உம் இவ்விரண்டும் பெயரேச்ச விகுதிகளாம்.

உ - ம். *வந்த, வருகின்ற, வரும்.*

## வினையெச்ச விகுதிகள்

**66.** உ, இ, *ய், அ, கு, இன், ஆல், கால், மல்,* மே, *து, றி என்னுமிப் பன்னிரண்டும் பிறவும்* வினையெச்ச விகுதி களாம்.

உ - ம். *நடந்து, ஓடி, போய், நடக்க, உண்ணற்கு, நடக்கின், நடந்தால், நடந்தக்கால், உண்ணமல், உண்ணமே, அல்லது, அன்றி என வரும்.*

## தொழிற் பெயர் விகுதிகள்

**76.** *தல், அல், அம், ஐ கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, மை, து என்ற* இப்பதினேழும் *பிறவும்* தொழிற் பெயர் விகுதிகளாம்.

உ - ம். *கடத்தல், ஆடல், வாட்டம், கொலை, வருகை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, உணர்ச்சி, கல்வி, விக்குள், சாக்காடு, கோட்பாடு, கடவாமை, வருவது என வரும்.*

## பண்புப் பெயர் விகுதிகள்.

**68.** *மை, ஐ, பு, கு, றி, று, அம், பம், நர் என்ற* இவ் *வொன்பதும்* பண்புப் பெயர் விகுதிகள்.

உ - ம். நன்மை, தொல்லே, மாண்பு, நன்கு, நன்றி, நன்று, நலம், ஒட்பம், நன்னர் என வரும்.

**69.** இ, ஐ, அம் இம்மூன்றும் வினைமுதற்பொருளையும், செயப்படு பொருளையும், கருவிப்பொருளையு முணர்த்தும்.

உ - ம். அலரி, பறவை, எச்சம் } வினை முதற் பொருளில் வந்தன.

ஊருணி, தொடை, தொல்காப்பியம் } செயப்படு பொருளில் வந்தன

மண் வெட்டி, பார்வை, நோக்கம் } கருவிப் பொருளில் வந்தன.

**70.** கோள் என்னும் விகுதி தற் செயலில் வரும்.

உ - ம். அடித்துக்கொள்.

**71.** உம் என்னும் விகுதி பிற் போருட்டில் வரும்.

உ - ம். வந்ததும் போனான்.

## பெயர்ப் பகுபதம்—Noun Compounds.

**72.** பெயர்ப் பகுபதங்கள் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற ஆறனுள் ஏதேனு மொன்றைப் பகுதியாகக் கொண்டு பிறக்கும்.

| | | |
|---|---|---|
| உ - ம். பொன்னன் | பொருளினடியாகப் | பிறந்தது. |
| மதுரையான் | இடம் | ,, |
| ஆதிரையான் | காலம் | ,, |
| கண்ணன் | சினை | ,, |
| கரியன் | குணம் | ,, |
| தட்டான் | தொழில் | ,, |

## வினைப் பகுபதம்—Verbal Compounds.

**73.** வினைப் பகுபதம்—தெரிநிலை வினைப் பகுபதம் குறிப்பு வினைப் பகுபதமென இரண்டு வகைப்படும்.

உ-ம். நடந்தான், பொன்னன்.

தெரிநிலையாவது முக்காலங்களுள் ஏதேனு மொன்றை வெளிப்படையாகத் தெரிவித்து நிற்பதாம். குறிப்பாவது—காலத்தைத் தெரிவிக்காமல் சொல்வோன் குறிப்பினால் அறிந்து கொள்ளக் கூடியது.

தெரிநிலை வினையாலணையும் பெயரும் வினைப் பகுபதமாம்.

உ-ம். வந்தவன், பாடுவான், வந்தவனை.

## இடைநிலை—Medial Particles

**74.** பெயர்ப் பகுபதத்தைப் பகுதி விகுதியாகப் பிரிக்கும்போது நடுவில் ஏதேனுமோர் எழுத்திருந்தால் அது பெயர்ப் பகுபத இடைநிலை என்று சொல்லப்படும்.

உ-ம். வலைச்சி } சகரமும் ஞகரமும் இடைநிலை
வலைஞன் } யாக வந்தன.

**75.** வினைப் பகுபத இடைநிலைகள் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகைப்படும்.

**76.** த், ட், ற், இன் என்னு மிந்நான்கும் இறந்த காலத்தைக் காட்டும் இடைநிலைகளாம்.

உ-ம். பிடித்தான், உண்டான், சென்றான், போயினான்.

**77.** ஆநின்று, கின்று, கிறு என்னு மிம்மூன்றும் நிகழ்காலத்தைக் காட்டும் இடை நிலைகளாம்.

உ-ம். உண்ணாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான்.

**78.** ப், வ் என்னு மிவ்விரண்டும் எதிர்காலத்தைக் காட்டி நிற்கு மிடைநிலைகளாம்.

உ - ம். நடப்பான், வருவான்.

**79.** செய்யுமென்னும் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, ஏவல் வினைமுற்று, செய்யுமென்னும் பெயரெச்சம், இகர, யகர வீற்றுச் செய்தென்னும் வினையெச்சம், செய, செயின் என்னும் வினையெச்சங்கள் மேலே கூறிய வினைப் பகுபத இடைநிலைகளைப் பெறா. அவ்வச் சொற்களிலுள்ள விகுதிகளே காலங்காட்டும்.

உ - ம். அவை நடக்கும், வருக, உண்ணாய், வருங்குதிரை, ஓடி, போய், நடக்க, நடக்கின் என வரும்.

பதவியல் முற்றிற்று.

---

## வடசொல்—SANSKRIT WORDS

**80.** ஆரியச் சொற்கள் தமிழ் உச்சாரணம் பெற்று, தமிழ் எழுத்துக்களால் எழுதப்பெற்றுத் தமிழில்வந்து வழங்கும்போது வடசொல் என்று வழங்கப்படும்.

**81.** அவ்வாறு வந்து வழங்கக்கூடிய சொற்கள் தற்சமம், தற்பவம் என இருவகைப்படும்.

**82.** ஆரியச்சொல்லும், வடசொல்லும் உச்சாரணத்தினால் விகாரப்படாமல் சமமாயிருப்பின் தற்சமம் எனப்படும்.

உ - ம். கமலம், காரணம்.

**83.** ஆரியச்சொல் வடசொல்லாகும்போது உச்சாரணத்தினால் விகாரமடைந்திருந்தால் அது தற்பவமாம்.

**84.** அவற்றுள் ஜகாரம், மொழிக்கு முதலில் சகாரமாகவும் நடுவில் சகாரமாகவும் யகரமாகவும் திரிந்து வரும்.

உ - ம். ஜலம்—சலம், விஜயம்—விசயம், புஜம்—புயம்.

**85.** ஷகாரம் மொழிக்கு முதலில் சகரமாகவும் இடையில் டகரமாகவும் திரியும்.

உ-ம். ஷஷ்டி—சட்டி, விஷயம்—விடயம்.

**86.** க்ஷகாரம், இரண்டுககரமாகவும், டகர சகரங்களாகவும் இரண்டு சகரமாகவும் திரிந்துவரும்.

உ-ம். சாக்ஷி—சாக்கி, சாட்சி; பிக்ஷை—பிச்சை.

**87.** ஸகாரம், சகரமாகவும், தகரமாகவும் திரியும்.

உ-ம். மாஸம்—மாசம், மாதம்.

**88.** ஹ மொழிக்கு முதலில் அகரமாகவும் நடுவிற் ககரமாகவும் திரிந்துவரும்.

உ-ம். ஹரன்—அரன், மோஹம்—மோகம்.

**89.** ஆகாரவீறு, ஐகாரமாகத் திரிந்தும் சிறுபான்மை திரியாமலும் வரும்.

உ-ம், மாலா—மாலை, தயா—தயா, தயை.

**90.** தமிழில் வசனமாக ஒரு நூல் செய்யும்பொழுது மாலை,தச்சன் முதலிய சில சொற்கள் தவிர மற்றச் சொற்களைத் திரியாமல் வடவெழுத்தாலே எழுதிக்கொள்ள விருப்பமிருந்தால் எழுதிக் கொள்ளலாம்.

உ-ம். மாஸம், மோஹம், பிக்ஷை, பக்ஷி.

வடசொல் முற்றிற்று.

---

## புணரியல்—ON COMBINATION OF WORDS

**91.** புணர்ச்சியாவது நிலைமொழியும் வருமொழியும் ஆகிய இரண்டும் ஒன்றுபடப் புணர்வதாம்.

அவற்றுள், முதலில் நிற்கும் மொழி, நிலைமொழியாம். அதற்குப் பின்னே அதனோடு சேர வரும் மொழி வருமொழியாம்.

உ-ம். அவன் வந்தான்.

இதில் அவன் என்பது நிலைமொழி, வந்தான் என்பது வருமொழி.

**92.** புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சியென்றும் அல்வழிப்புணர்ச்சியென்றும் இருவகைப்படும்.

## வேற்றுமைப் புணர்ச்சி—Casal Combination

**93.** வேற்றுமைம் புணர்ச்சியாவது ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறு உருபுகளும் மொழிக்கு நடுவில் மறைந்தும் வெளிப்பட்டும் நிற்கப் பதங்கள் பொருந்தும் புணர்ச்சியாம்.

| உ-ம். தொகை | விரி |
|---|---|
| நீர்குடித்தான் | நீரைக்குடித்தான் |
| கல்லெறிந்தான் | கல்லாலெறிந்தான் |
| கூலிவேலை | கூலிக்குவேலை |
| மலைவீழருவி | மலையின்வீழருவி |
| சாத்தன்கை | சாத்தனதுகை |
| மனைவிளக்கு | மனையின்கண்விளக்கு |

## அல்வழிப் புணர்ச்சி—Non-Casal Combination

**94.** அல்வழிப் புணர்ச்சியாவது, வேற்றுமை யுருபுகள் இடையில் வராமல் நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுபடப் புணர்வதாம். அது பதினொன்கு வகைப்படும். அதைப் பின் வரும் உதாரணங்களிற் கண்டு கொள்க.

உதாரணம்

1. கொல்யானை—வினைத்தொகை.
2. கருங்குதிரை—பண்புத் தொகை.
   சாரைப்பாம்பு—இரு பெயரொட்டுப் பண்புத்தொகை.
3. மதிமுகம்—உவமைத்தொகை.
4. இராப் பகல்—உம்மைத்தொகை.
5. கருங்குழல் (வந்தாள்)—அன்மொழித்தொகை.
6. சாத்தான் வந்தான்—எழுவாய்த் தொடர்.
7. சாத்தா வா—விளித்தொடர்.

8. வந்த குதிரை—தெரிநிலைப் பெயரெச்சத் தொடர்.
பெரிய சாத்தான்—குறிப்பு பெயரெச்சத் தொடர்.
9. வந்துபோனான்—தெரிநிலை வினையெச்சத் தொடர்.
விருந்தின்றி உண்டான்—குறிப்புவினையெச்சத்தொடர்.
10. வந்தான் சாத்தன்—தெரிநிலை வினைமுற்றுத் தொடர்.
11. பொன்னனிவன்—குறிப்பு வினைமுற்றுத் தொடர்.
12. மற்றொன்று—இடைச்சொற்றொடர்.
13. நனிபேதை—உரிச்சொற்றொடர்.
14. புலி புலி—அடுக்குத் தொடர்.

**95.** இப் புணர்ச்சிகளுள் ஒவ்வொன்றும் இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி யென இருவகைப்படும்.

**96.** நிலைமொழியீறும் வருமொழி முதலும் ஒருவித மான வேறுபாடுமின்றிப் புணர்வது இயல்பு புணர்ச்சியாம்.

உ - ம். பொன் + மணி = பொன்மணி.

மலை + பெரிது = மலைபெரிது.

**97.** பதங்கள் ஒன்றோடொன்று சேரும்பொழுது அவற்றினிடையில் எழுத்தாவது சாரியையாவது தோன்றுதலும், நிலைமொழி யீற்றிலுள்ள எழுத்தாவது வருமொழி முதலிலுள்ள எழுத்தாவது திரிதலும், கெடுதலும் அடைந்த புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி யெனப்படும்.

**98.** ஓரெழுத்துத் தோன்றுவதைத் தோன்றல் விகார மென்றும், திரிந்து வருதை திரிதல் விகார மென்றும், கெட்டு வருவதைக் கெடுதல் விகார மென்றுஞ் சொல்லப் படும்.

உ - ம். மா + காய் = மாங்காய் }
ஆல் + காய் = ஆலங்காய் } தோன்றல்.

எள் + நெய் = எண்ணெய்—திரிதல்.

மரம் + வேர் = மரவேர்—கெடுதல்.

## உடம்படு மெய்

**99.** இ, ஈ, ஐ என்னும் இம்மூன்று உயிர்களுக்கு முன் உயிரெழுத்துக்கள் வந்தால் யகரம் உடம்படு மெய்யாக வரும்.

உ - ம். மணி + அழகு = மணியழகு.
தீ + அழகு = தீயழகு.
மனை + அழகு = மனையழகு.

**100.** உடம்படு மெய்யாவது:—உயிரெழுத்தோடு உயிரெழுத்து சேர்ந்து வரமாட்டா; ஆகையால் வருகின்ற உயிரெழுத்துக்கு உடம்பாக அடுத்துவரும் மெய்யாம். அன்றியும் இரண்டு உயிரெழுத்துக்களையும் உடன்படுத்தும் பொருட்டு வரும் மெய்யாதலின் உடம்படு மெய் என்னும் பெயர் பெற்றது என்றலுமாம். அப்பொழுது உடன்படு மெய் என்பது மருவி வந்ததெனக் கொள்க.

**101.** அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் இவ்வாறு உயிரெழுத்துக்களுக்கு முன் உயிர் வந்தால் இடையில் வகரம் உடம்படு மெய்யாக வரும்.

உ - ம். பல + அழகு = பலவழகு.
பலா + அழகு = பலாவழகு.
மது + அழகு = மதுவழகு.
பூ + அழகு = பூவழகு.
கோ + அழகு = கோவழகு.
கௌ + அழகு = கௌவழகு.

**102.** அது, இது, உது என்னும் சுட்டுப் பெயர் முன்னும், எது என்னும் வினைப்பெயர் முன்னும் உயிரெழுத்துக்கள் வந்தால் நிலைமொழியினிடையே பெரும்பாலும் ஆய்தம் விரியும். இது, எது இவ்விரண்டும் முதல் நீளவும் பெறும்.

உ - ம். அது + ஒளிரும் = அஃதொளிரும்.
இது + எங்கே = இஃதெங்கே; ஈதெங்கே.
உது + ஓடும் = உஃதோடும்.
எது + இருந்தது = எஃதிருந்தது; ஏதிருந்தது)

**103.** (ஓரெழுத் தொருமொழியாகிய ஏ, சே, தே என்னும் பெயர்ச்சொல், ஏகாரத்திற்கு முன் உயிர் வந்தால் வகரமும், பண்புச் சொல்லின் விகாரமாகிய சே என்பதற்கு முன் உயிர் வந்தால் யகரமும் வகரமும் தோன்றும்.)

உ - ம். ஏ + அழகு = ஏவழகு.
சே + அழகு = சேவழகு.
தே + அழகு = தேவழகு.
சே + அடி = சேயடி, சேவடி.

**104.** இடைச் சொல்லாகிய ஏகாரத்திற்கு முன்னே உயிர் வந்தால் யகரமே உடம்படு மெய்யாக வரும்.

உ - ம். அவனே + அடித்தான் = அவனே யடித்தான்.

**105.** மெய் யெழுத்துக்கு முன் உயிர் வந்தால் அவ் வுயிர் மெய்யெழுத்தின் மேல் ஏறும். இது இயல்பு புணர்ச்சியேயாம்.

உ - ம். வேல் + அழகு = வேலழகு.

**106.** தனிக் குற்றெழுத்தைச் சேர்ந்த மெய்யின் முன் உயிர் வந்தால் அம்மெய் இரட்டும்.

உ - ம். கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்.

**107.** எகர வினாவின் முன்னும் சுட்டின் முன்னும் உயிரும் யகரமும் வந்தால் வகரமும், மற்ற மூன்றினமும் வந்தால் வந்த எழுத்தும் தோன்றும்.

உ - ம். எ + உயிர் = எவ்வுயிர்.
எ + யானை = எவ்யானை.
அ + உயிர் = அவ்வுயிர்.

அ + யானை = அவ்யானை.
எ + காலம் = எக்காலம்.
எ + நாள் = எந்நாள்.
எ + வலி = எவ்வலி.
அ + காலம் = அக்காலம்.
அ + நாள் = அந்நாள்.
அ + வலி = அவ்வலி.

**108.** குற்றியலுகரத்தின் முன் உயிர் வந்தால் உகரங் கெட்டு மெய்யில் வந்த உயிரேறும்.

உ - ம். நாடு + ஆண்டான் = நாடாண்டான்.

**109.** குற்றியலுகரம் வடமொழிச் சொல்லாக இருந்தால் கெடாமல் வரும். இதனைக் குற்றியலுகாமென்னுமல் முற்றுகாமென்று கூறுதலே சிறப்புடையது.

உ - ம். சம்பு + ஐ = சம்புவை.
விண்டு + ஐ = விண்டுவை.
இந்து + ஐ = இந்துவை.

**110.** தனிக் குற்றெழுத்தைச் சார்ந்த கு, சு, டு, து, பு, று க்களாகிய முற்றியலுகரங்களுக்கு முன்னே உயிர் வந்தால் அவ்வுகரங் கெடாமல் உடம்படு மெய் தோன்றும்.

உ - ம், வெகு + அழகு = வெகுவழகு.
பசு + அழகு = பசுவழகு.
மடு + வழகு = மடுவழகு.
மது + அழகு = மதுவழகு.
பு + ஒழிந்தது = புவொழிந்தது.
மறு + அறுத்தான் = மறுவறுத்தான்.

**111.** டுகா றுகாங்களை ஈற்றிலேயுடைய உயிர்த்தொடர்க் குற்றிய லுகாங்களுக்கு முன்னும், நெடிற்றொடர் குற்

றிய லுகரங்களுக்கு முன்னும் வேற்றுமையில் நாற்கணமும் வந்தால் உகரமேறிய மெய் இரட்டும்.

நாற்கணமாவன—உயிர்க்கணம், வன்கணம், மென் கணம், இடைக்கணம்.

உ - ம்.

துறடு + ஆணி = துறட்டாணி
துறடு + கோல் = துறட்டுக்கோல்
துறடு + மூங்கில் = துறட்டுமூங்கில்
துறடு + வாய் = துறட்டுவாய்
மிடறு + ஒலி = மிடற்றொலி
மிடறு + பாட்டு = மிடற்றுபாட்டு
கிணறு + நீர் = கிணற்றுநீர்
வயிறு + வலி = வயிற்றுவலி

— உயிர்த்தொடர்.

உ - ம்.

காடு + ஆறு = காட்டாறு
காடு + குதிரை = காட்டுக்குதிரை
காடு + மரம் = காட்டுமரம்
காடு + வாழ்க்கை காட்டுவாழ்கை
ஆறு + ஓரம் = ஆற்றோரம்
ஆறு + கால் = ஆற்றுக்கால்
ஆறு + மேடு = ஆற்றுமேடு[க்கால்
ஆறு + வாய்க்கால் = ஆற்றுவாய்

— நெடிற்றொடர்.

**112.** இக் குற்றிய லுகரங்கள் பண்புத் தொகையிலும் இரட்டும்.

உ - ம். குருடு + கண் = குருட்டுக்கண்.
மூடு + பூச்சி = மூட்டுப்பூச்சி.
வறடு + ஆடு = வறட்டாடு.
முயிறு + எறும்பு = முயிற்றெறும்பு.

**113.** எருது என்னும் உயிர்த்தொடரும் இரட்டி வரும்.

உ - ம். எருது + மாடு = எருத்துமாடு.

**114.** ஆறும் வேற்றுமைத் தொகையிலும் விரியிலும் இரட்டி வரும்.

உ - ம். ஆடு + கால் = ஆட்டுக்கால்—ஆட்டினதுகால்.

**115.** மேலே கூறிய இரண்டு தொடர்களும் இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும், ஏழாம் வேற்றுமைத் தொகையிலும் இரட்டமாட்டா.

உ - ம். நாடு + ஆண்டான் = நாடாண்டான்.
காடு + சென்றான் = காடு சென்றான்.
துறடு + எறிந்தான் = துறடெறிந்தான்.
கிணறு + இழிந்தான் = கிணறிழிந்தான்.

**116.** தனி நெட்டெழுத்தின் முன்னும் குறில் நெடிலிணைந்த மொழியின் முன்னும் இரு வழியினும் வல்லினம் மிகும்.

உ - ம். பூ + பூத்தது = பூப்பூத்தது.
பூ + பறித்தான் = பூப்பறித்தான்.
சுறா + பாய்ந்தது = சுறாப்பாய்ந்தது.
சுறா + பிடித்தான் = சுறாப்பிடித்தான்.

**117.** உயிரெழுத்தையும் மெய்யெழுத்தையும் இறுதியாகவுடைய உயர்திணைப் பெயர், பொதுப் பெயர், வினாவையடுத்த பெயர், விளிப் பெயர், எழுவாய்த் தொடர் இவ்வைந்தின் முன்னும் வல்லெழுத்து மிகாது.

உ - ம். தம்பி + கை = தம்பிகை
கண்ணன் + கை = கண்ணன்கை } உயர்திணைப் பெயர்.

நீ + குறியை = நீகுறியை
நீர் + குறியீர் = நீர்குறியீர் } பொதுப் பெயர்.

அவனா + கொண்டான் = அவனாகொண்டான்—வினாவையடுத்த பெயர்.
சாத்தா + கொடு = சாத்தாகொடு—விளிப்பெயர்.
நம்பி + தந்தான் = நம்பி தந்தான்
நளன் + கண்டான் = நளன்கண்டான் } எழுவாத் தொடர்.

**118.** பலவகைப்பட்ட வினைமுற்றுக்களின் முன்னும், பெயரெச்சத்தின் முன்னும், வினைத்தொகை முன்னும் வல்லொற்று மிகாது.

உ - ம். வந்தார் கொற்றர்—உயர்திணைப் படர்க்கை வினைமுற்று.

உண்டது குதிரை } அஃறிணைப் படர்க்கை
உண்டன குதிரைகள் } வினைமுற்று.

வாழ்க கொற்று—வியங்கோள் வினைமுற்று.

உண்டி கொற்று
உண்டனை கொற்று
உண்டாய் கொற்று
உண்டீர் கொற்றரே } முன்னிலை வினைமுற்று.

ஓடு சாத்தா
உண்ணாய் கொற்று
உண்ணு கொற்று
உண்ணீர் கொற்றரே } ஏவல் வினைமுற்று.

வந்த குதிரை — பெயரெச்சம்.

குளிர் காற்று — வினைத்தொகை.

**119.** உயிரீற்றுச் சுட்டிப்பெயர் முன்னும் வினைப்பெயர் முன்னும் வலி மிகாது.

உ - ம். அது + குறிது = அது குறிது
அவை + குறிய = அவை குறிய } சுட்டுப் பெயர்.

எது + குறிது = எது குறிது
எவை + குறிய = எவை குறிய } வினைப்பெயர்.

**120.** திரிந்த சுட்டுப் பெயர் முன்னும் திரிந்த வினைப் பெயர் முன்னும் சுட்டு மிகுந்து வரும்.

உ - ம். அந்த + குதிரை = அந்தக் குதிரை—சுட்டுத் திரிபு.
எந்த + குதிரை = எந்தக் குதிரை—வினைத் திரிபு.

**121,** உகரத்தை ஈற்றிலேயுடைய விகார எண்ணுப் பெயர் முன் வலி மிகாது.

உ - ம். ஒரு சாண், இரு கை, அறு சுவை, எழு கடல்.

**122.** உயிரெழுத்தையும் மெய்யெழுத்தையும் இறுதியாகவுடைய அஃறிணைப் பெயர்களின் முன் வேற்றுமையில் வலி மிகும்.

உ - ம். குதிரை+கால்=குதிரைக் கால் } உயிரீற்று அஃறிணைப் பெயர்
கிளி+சிறகு=கிளிச் சிறகு

நாய்+கால்=நாய்க் கால் } மெய்யீற்று அஃறிணைப் பெயர்.
தேர்+கால்=தேர்க் கால்

**123.** பண்புத் தொகையில் உயர்திணையிலும் அஃறிணையிலும் வலி மிகுந்து வரும்.

உ - ம். நம்பி கொற்றன்=நம்பிக் கொற்றன்.
சாரை+பாம்பு=சாரைப் பாம்பு.

**124.** சிறு என்னும் பண்புப் பகுதியின் முன் மாத்திரம் பெரும்பாலும் வல்லெழுத்து மிகுவாது.

உ - ம். சிறு+துரும்பு=சிறு துரும்பு,

**125.** சிறு, வெறு, குறு, நாடு, புது, என்னும் பண்புப் பகுதிகளின் முன் உயிர் வந்தால் உகரமேறிய மெய் இரட்டும்.

உ - ம், சிறு+அப்பன்= சிற்றப்பன்.
வெறு+இலை=வெற்றிலை.
குறு+உடைவாள்=குற்றுடைவாள்.
நடு+ஆறு=நட்டாறு.
புது+உருக்கு நெய்=புத்துருக்கு நெய்,

**126.** சிறு என்னும் சொல்லைத் தவிர, குறு, வெறு, நெடு, பெறு, அரு, கரு என்னும் பண்புப் பகுதிகளின் முன் வல்லினம் வந்தால் அவற்றிற்கு இன மெல்லெழுத்துத் தோன்றும்.

உ - ம். குறு+கை=குறுங்கை
வெறு+பொய்=வெறும் பொய்.
நெடு+தூண்=நெடுந் தூண்.
பெரு+பேச்சு=பெரும் பேச்சு.
அரு+பொருள்=அரும்பொருள்.
கரு+குதிரை=கருங்குதிரை.

**127.** பெரு, அரு, கரு என்னும் சொற்களின் முன்னே உயிரெழுத்து வந்தால் முதல் நீண்டு வரும்.

உ-ம். பெரு + ஆசை = பேராசை.
அரு + உயிர் + ஆருயிர்.
கரு + ஆடு + காராடு.

**128.** பல, சில என்னும் சொற்களின் முன் வல்லினம் வந்தால் இயல்பாக வரும்.

உ-ம். பல + பேச்சு + பலபேச்சு.
சில + பொருள் = சிலபொருள்.

**129.** இகர யகரங்களை ஈற்றிலேயுடைய செய்தென்னும் வினையெச்சத்தின் முன்னும், அகரத்தை ஈற்றிலேயுடைய செயவென்னும் வினையெச்சத்தின் முன்னும் வல்லினம் வந்தால் மிகும்.

உ-ம். ஆடி + கொண்டான் = ஆடிக்கொண்டான்.
போய் + கண்டான் = போய்க்கண்டான்.
பார்க்க + போனான் = பார்க்கப்போனான்.

**130.** மென்றொடர், இடைத்தொடர், ஒற்றெழுத்துக்கள் இடையே மிகாத நெடிற்றொடர் உயிர்த்தொடர்களாகிய இக்குற்றியலுகர மொழிகளுக்கு முன்னே அல்வழியில் வல்லினம் மிகாது.

உ-ம். வந்து + போனான் = வந்து போனான்.
செய்து + தந்தான் = செய்து தந்தான்.
ஆறு + தூண் = ஆறு தூண்.
வரகு + காய்ந்தது = வரகு காய்ந்தது.

**131.** சில மென்றொடர்க் குற்றியலுகர மொழிகள் வன்றொடர்க்குற்றியலுகரங்களாக மாறிவருவதலும் அதனோடு அம் என்னும் சாரியை பெற்று வருதலும் உண்டு.

உ - ம். இரும்பு + உலக்கை = இருப்புலக்கை.
கரும்பு + சாறு = கருப்பஞ்சாறு.

**132.** வன்றொடர்க் குற்றியலுகரங்களின் முன் இருவழியிலும் வல்லினம் மிகும்,

உ - ம். அறுத்து + தந்தான் = அறுத்துத்தந்தான்.
கொக்கு + கால் = கொக்குக்கால்.

**133.** அன்று, இன்று, என்று என்னும் மென்றொடர்க் குற்றியலுகாச் சொற்களும் நேற்று என்னும் வன்றொடர்க் குற்றியலுகாமும் ஐகாரச் சாரியை பெற்று வரும்.

உ - ம். அன்று + கு = அன்றைக்கு.
இன்று + கு = இன்றைக்கு.
என்று + கு = என்றைக்கு.
நேற்று + கு = நேற்றைக்கு.

**134.** படி என்னும் இடைச் சொல் வினைச்சொல்லை யடுத்து வரும்போது வலிமிகாமலும், சுட்டு, வினு இவைகளை யடுத்து வரும்போது வலி மிகுந்தும் சில விடங்களில் மிகாமலும் வரும்.

உ - ம். வரும்படி சொன்னுன்.
அப்படிச் செய்தான் } சுட்டு.
அப்படி செய்தான்
எப்படிச் செய்தான் } வினு.
எப்படி செய்தான்

**135.** தனை, அளவு என்னும் பண்புச் சொற்களின் முன் வல்லினம் மிகாது.

உ - ம். அத்தனை பேச்சு.
அவ்வளவு பேச்சு.

**136.** அன்றி, இன்றி என்னும் எதிர்மறைக் குறிப்பு வினையெச்சங்களுக்கு முன்னும், மெல்ல பைய, வலிய

என்னும் உடன்பாட்டுக் குறிப்பு வினை யெச்சங்களுக்கு முன்னும் வல்லினம் வந்தால் மிகும்.

உ-ம். அன்றி + போனான் = அன்றிப்போனான்.
இன்றி + கண்டான் = இன்றிக்கண்டான்.
மெல்ல + பேசினான் = மெல்லப்பேசினான்.
பைய + சென்றான் = பையச்சென்றான்.
வலிய + சொன்னான் = வலியச்சொன்னான்.

**137.** ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்களுக்கு முன் வல்லினம் வந்தால் மிகும்.

உ-ம். நடவா + குதிரை = நடவாக்குதிரை.
இல்லா + பொருள் = இல்லாப்பொருள்.

**138.** சில உயிரீற்று மரப்பெயர்களுக்கு முன்னே வல்லினம் வந்தால் அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்துத் தோன்றும்.

உ-ம். மா + காய் = மாங்காய்.
விளா + காய் = விளாங்காய்.

**139.** சில ஐகார ஈற்று மரப்பெயர்களுக்கு முன்னே வல்லினம் வந்தால் ஐ கெட்டு அம் என்னும் சாரியை தோன்றும்.

உ-ம். எலுமிச்சை + காய் = எலுமிச்சங்காய்.
மாதுளை + காய் = மாதுளங்காய்.
தாழை + பூ = தாழம்பூ.
நாரத்தை + பழம் = நாரத்தம்பழம்.
தூதுளை + கீரை = தூதுளங்கீரை
பாவட்டை + காய் = பாவட்டங்காய்.

**140.** இகர உகரங்களையும், லகரத்தையும் ஈற்றிலே உடைய சொற்களின் முன்னும் வல்லினம் வந்தால் அம்முச் சாரியை தோன்றும்.

உ - ம். புளி + காய் = புளியங்காய்.
புன்கு + காய் = புன்கங்காய்.
ஆல் + காய் = ஆலங்காய்.

**141.** ஒன்று என்னும் எண்ணுப்பெயர் வருமொழியோடு சேரும்பொழுது, ஈற்றிலே உள்ள உயிர்மெய் கெட்டு னகரம் ரகாமாய் அதன்மேல் உகரச் சாரியை வரும்.

உ - ம். ஒன்று + கழஞ்சு = ஒரு கழஞ்சு.
ஒன்று + நாள் = ஒரு நாள்.

வருமொரு முதலில் உயிர் வந்தால் முதல் நீண்டு உகரச் சாரியை கெடும்.

உ - ம். ஒரு + ஆயிரம் = ஓராயிரம்.
ஒரு + அரும்பு = ஓரரும்பு.

**142.** இரண்டு என்னும் எண்ணுப்பெயர் வருமொழியோடு புணரும்பொழுது இகரமும் ரகா ஒற்றுமே நிற்க, மற்றைய எழுத்தெல்லாங் கெட்டு உகரச் சாரியை பெற்று வரும்.

உ - ம். இரண்டு + கழஞ்சு = இருகழஞ்சு.
இரண்டு + நாள் = இருநாள்.

வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் முதல் ......டு உகரச் சாரியை கெடும்.

உ - ம். இரண்டு + ஆயிரம் = ஈராயிரம்.
இரண்டு + உயிர் = ஈருயிர்.

**143.** மூன்று என்னும் எண்ணின் முன் உயிர் வந்தால் ஈற்றுயிர் மெய்யும் னகரமுங் கெடுதலும், மெய் வரின் முதல் குறுகி ஈறு கெட்டு னகரம் வருகிற மெய்யாகத் திரிதலுமாம்.

உ - ம். மூன்று + ஆயிரம் = மூவாயிரம்.
மூன்று + கலம் = முக்கலம்.
மூன்று + நாழி = முந்நாழி.
மூன்று + வட்டி = முவ்வட்டி.

**144.** மூன்று என்னும் நிலைமொழியின் முன் வகரம் வந்தால் முதல் குறுகாமல் வரும்.

உ-ம். மூன்று + வகை = மூவகை.

**145.** நான்கு என்னும் எண் ஈறு கெட்டு னகரம் லகர றகரமாகத் திரியும்.

உ-ம். நான்கு + ஆயிரம் = நாலாயிரம்.
நான்கு + பத்து = நாற்பது.

**146.** ஐந்து என்னும் எண்ணின் முன் மெய்வரின் ஈற்றெழுத்துக் கெட்டு நகரம் வருகிற மெய்யாதலும் அதற் கினமாதலும் உயிர் வரின் கெடுதலுமாம்.

உ-ம். ஐந்து + மூன்று = ஐம்மூன்று.
ஐந்து + கலம் = ஐங்கலம்.
ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்.

**147.** ஆறு என்னும் எண் குறுகலும் இயல்புமாம்.

உ-ம். ஆறு + தொழில் = அறுதொழில்.
ஆறு + கால் = ஆறுகால்.

உயிர் முதல்மொழி வரின் முதல் குறுகாது இயல்பாகவே நிற்கும்.

உ-ம். ஆறு + ஆயிரம் = ஆறாயிரம்.

**148.** ஏழு என்னும் எண்ணின் முன் உயிர் வந்தால் ஈற்றிலே உள்ள உகரங் கெடுதலும் மெய் வரின் முதல் குறுகலும் குறுகாமையுமாம்.

ஏழு + ஆயிரம் = ஏழாயிரம்.
ஏழு + நூறு = ஏழுநூறு.
ஏழு + பணம் = ஏழுபணம்.

**149.** எட்டு என்னும் எண்ணின் முன் உயிரையும் மெய்யையும் முதலாகவுடைய எண்ணுப் பெயர்கள் வந்தால் ஈற்றெழுத்துக் கெட்டு டகரம் ணகரமாக வரும். மற்றைய

மெய்ம்முதற் பெயரும் உயிர்முதற் பெயரும் வந்தால் வழக்கத்தில் இயல்பாம்.

உ - ம். எட்டு + ஆயிரம் = எண்ணுயிரம்.
எட்டு + நூறு = எண்ணூறு.
எட்டு + மாடு = எட்டு மாடு.
எட்டு + இலை = எட்டிலை.

**150.** ஒன்பது என்னும் எண்ணின் முன் எண்ணுப் பெயர்களல்லாத மற்ற உயிர் முதல் மொழிகளும், மெய்ம் முதன் மொழிகளும் வந்தால், முறையே உகரங்கெட நின்ற மெய்யின்மேல் உயிர் ஏறலும் இயல்புமாம்.

உ - ம். ஒன்பது + ஆடு = ஒன்பதாடு
ஒன்பது + பாட்டு = ஒன்பது பாட்டு.

**151.** பத்து என்னும் எண்ணின் முன் இரண்டு என்னும் எண்ணுப் பெயர் வந்தால் உம்மைத்தொகையில் ஈற்றுயிர் மெய் கெட்டு, தகர வொற்று னகரமாகும்.

உ - ம். பத்து + இரண்டு = பன்னிரண்டு.

**152.** பத்து என்பதன் முன் ஒன்று, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, என்னும் இவ்வேழு எண்களும் உம்மைத் தொகையினும், ஆயிரம் பண்புத் தொகையினும் வந்தால் ஈற்றுயிர் மெய் கெட்டு இன்சாரியை தோன்றும்.

உ - ம். பத்து + ஒன்று = பதினொன்று.
பத்து + மூன்று = பதின் மூன்று.
பத்து + நான்கு = பதினான்கு.
பத்து + ஐந்து = பதினைந்து.
பத்து + ஆறு = பதினாறு.
பத்து + ஏழு = பதினேழு.
பத்து + எட்டு = பதினெட்டு.
பத்து + ஆயிரம் = பதினாயிரம்.

**153.** பத்து என்பதன் முன் ஒன்று முதலாகிய எண்ணுப் பெயர்களும், ஆயிரமும் வந்தால் பண்புத் தொகையில் ஈற்றுயிர்மெய் கெட்டு 'இற்று' என்னும் சாரியை தோன்றும்.

உ-ம். பத்து + ஒன்று = பதிற்றொன்று.
பத்து + இரண்டு = பதிற்றிரண்டு.
பத்து + மூன்று = பதிற்று மூன்று.
பத்து + நான்கு = பதிற்று நான்கு,
பத்து + ஆயிரம் = பதிற்றாயிரம்.

**154.** இரண்டு முதல் எட்டீறாகிய எண்களின் முன் பத்து என்னும் எண் வந்தால் பத்தின் இடையில் நின்ற தகரங் கெடும்.

உ-ம். இரண்டு + பத்து = இருபது.
மூன்று + பத்து = முப்பது.
நான்கு + பத்து = நாற்பது.
ஐந்து + பத்து = ஐம்பது.
ஆறு + பத்து = அறுபது.
எட்டு + பத்து = எண்பது.

**155.** இருபது முதல் எண்பதீறாகிய எண்களின் முன் ஒன்று முதல் ஒன்பதெண்ணும் அவையடுத்த பிறபெயரும் வந்தால் நிலைமொழி யீற்றுக்கு அயலில் தகரவொற்றுத் தோன்றும்.

உ-ம். இருபது + இரண்டு = இருபத்திரண்டு.
முப்பது + நான்கு = முப்பத்திநான்கு.
அறுபது + ஏழரை = அறுபத்தேழரை.
எண்பது + ஒன்பது = எண்பத்தொன்பது,

**156.** இருபது முதல் எண்பதீறாகிய எண்களின் முன்னும், ஒன்பது என்பதன் முன்னும், ஆயிரம் வந்தால் இடையில் இன் சாரியை தோன்றும்.

உ - ம். இருபது + ஆயிரம் = இருபதினாயிரம்.
அறுபது + ஆயிரம் = அறுபதினாயிரம்.
எண்பது + ஆயிரம் = எண்பதினாயிரம்.
ஒன்பது + ஆயிரம் = ஒன்பதினாயிரம்.

**157**. ஒன்று முதல் பத்தீருகிய எண்களின் முன் அவையே இரட்டித்து வந்தால் நிலைமொழியின் முதலெழுத்து அல்லாதவைகளெல்லாம் கெட, வருமொழி முதலில் உயிர் வந்தால் வகரமும், மெய்ம்முதல் மொழியாக வந்தால் வந்த மெய்யும் மிக நிலைமொழி முதலிலுள்ள ஐகாரமொழிந்த நெடில் குறுகும்.

உ - ம். ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று.
இரண்டு ÷ இரண்டு = இவ்விரண்டு.
மூன்று + மூன்று = மும்மூன்று.
நான்கு + நான்கு = நன்னான்கு.
ஐந்து + ஐந்து = ஐவைந்து.
ஆறு + ஆறு = அவ்வாறு.
ஏழு + ஏழு = எவ்வேழு.
எட்டு + எட்டு = எவ்வெட்டு.
ஒன்பது + ஒன்பது = ஒவ்வொன்பது.
பத்து + பத்து = பப்பத்து.

**158**. ஒன்பது என்னும் எண்ணுப்பெயர்முன் பத்து என்னும் எண் வந்தால் பது என்பது கெட்டு னகரம் ணகரமாகி, நிலைமொழி முதலிலிருக்கும் ஒகர உயிர் தகர வொற்றிலேறி வருமொழியாகிய பத்து நூருகத் திரியும்.

உ - ம். ஒன்பது + பத்து = தொண்ணூறு.

**159**. ஒன்பது என்பதன்முன் நூறு என்னும் எண் வந்தால் பது கெட்டு னகரம் ளகரமாகி நிலைமொழி முதலி

லிருக்கும் ஒகர உயிர் தகர வொற்றிலேறி வருமொழியாகிய நூறு ஆயிரமாகத் திரியும்.

உ-ம். ஒன்பது + நூறு = தொள்ளாயிரம். இது தொளாயிரம் எனவும் வழங்கும்.

**160.** உயர்ந்த எண்ணின் முன் தாழ்ந்த எண் வந்தால் ஏகாரச்சாரியை பெற்று வரும்.

உ-ம். ஒன்று + கால் = ஒன்றேகால்.
இரண்டு + முக்கால் = இரண்டே முக்கால்.

**161.** ஒன்று முதலாகிய எண்களின்முன் அரை என்னும் எண் வந்தால் அவை சாரியை பெறாமல் வரும்.

உ-ம். இரண்டு + அரை = இரண்டரை.
ஏழு + அரை = ஏழரை

**162.** கிழக்கு என்னும் சொல்லோடு பிற பெயர்கள் வந்து சேரும்பொழுது ஈற்றிலேயுள்ள உயிர்மெய்யும் ககர வொற்றும் அகர வுயிரும் கெட்டு முதல் நீண்டு வரும்.

உ-ம். கிழக்கு + கடல் = கீழ்கடல்.
கிழக்கு + பால் = கீழ்பால்.
கிழக்கு + திசை = கீழ்திசை.

**163.** இது சில விடங்களில் முன்னே கூறிய திரிபுகளடைந்த பிறகு வலி மிகுதலும், ஐகாரச் சாரியை பெற்று வருவதலும் வலி மிகுதலுமாம்.

உ-ம். கிழக்கு + திசை = கீழ்த்திசை.
கிழக்கு + வீடு = கீழைவீடு.
கிழக்கு + தடி = கீழைத்தடி.

**164.** தெற்கு என்னும் திசைப்பெயர் மேற்கு, கிழக்கு இவைகளோடும், பிறபெயரோடும் சேர்ந்தால் நிலைமொழியீற்றிலுள்ள உயிர்மெய் கெட்டு றகரம் னகரமாகத் திரியும்.

உ - ம். தெற்கு + மேற்கு = தென்மேற்கு.
தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு.
தெற்கு + நாடு = தென்நாடு.
தெற்கு + மொழி = தென்மொழி.

**165.** மேற்கு என்னும் திசைப்பெயர் மற்றப்பெயர்களோடும் புணரும்போது நிலைமொழியின் ஈறுகெட்டு றகரம் விகற்பமாக லகரமாதலும் இயல்பாதலும் ஆம்.

உ - ம். மேற்கு + புறம் = மேல்புறம், மேற்புறம்,
மேற்கு + கடல் = மேல்கடல், மேற்கடல்.
மேற்கு + ஊர் = மேலூர், மேற்கூர்.

**166.** இது சில விடங்களில் முன்னே கூறியபடி றகரம் லகரமான பிறகு ஐகாரச் சாரியை பெறலும், வலி மிகலுமாம்.

உ - ம். மேற்கு + வயல் = மேலைவயல்.
மேற்கு + புலம் = மேலைப்புலம்.

**167.** வடக்கு என்னும் திசைப் பெயர் மேற்கு, கிழக்கு என்னும் பெயர்களோடும் மற்றப் பெயர்களோடும் சேரும் பொழுது நிலைமொழி யீற்றிலே உள்ள உயிர்மெய்யும் சகர வொற்றுங் கெடும்.

உ - ம். வடக்கு + மேற்கு = வடமேற்கு
வடக்கு + கிழக்கு = வடகிழக்கு.
வடக்கு + மலை = வடமலை.
வடக்கு + நாடு = வடநாடு

**168.** ஒடு, ஓடு உருபுகளின் முன்னும், அது உருபின் முன்னும் வல்லினம் வந்தால் மிகாது.

உ - ம். அவனொடு + போனான் = அவனொடு போனான்.
அவனோடு + சொன்னான் = அவனோடு சொன்னான்.
அவனது + குதிரை = அவனது குதிரை.

**169.** என்ன என்னும் விகாரப்பட்ட வினவின் முன் வல்லினம் வந்தால் மிகாது.

இது எவன் என்னும் வினவினைக் குறிப்பின் விகாரமாம். என், என்னை, ஏன் என்பவைகளும் அப்படியே.

உ - ம். என்ன + செய்தி = என்ன செய்தி.

என்ன + கொடுத்தான் = என்ன கொடுத்தான்.

**170.** இரண்டாம் வேற்றுமைத் தொகையின் முன் வல்லினம் வந்தால் மிகாது. விரியின் முன் மிகும்.

உதாரணம்.

புளி + தின்ருன் = புளிதின்ருன்
நீர் + குடித்தான் – நீர்குடித்தான் } 2-ம் வேற்றுமைத் தொகையின் முன் மிகாமல் வந்தது.

புளியை + தின்ருன் = புளியைத்தின்ருன்
நீரை + குடித்தான் = நீரைக்குடித்தான் } விரியின் முன் மிக்கு வந்தது

**171.** இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லொற்று மிகும்.

உ - ம். குடுமி + பையன் = குடுமிப்பையன்.
தயிர் + குடம் = தயிர்க்குடம்.

**172.** உலக வழக்கத்திலே உயர் திணையில் இரண்டாம் வேற்றுமை விரிந்தே வரும்.

உ . ம். தமையனை + கண்டான் = தமையனைக் கண்டான்.

**173.** ணகர, னகரங்கள் வல்லினம் வந்தால் வேற்றுமையில் டகர றகரங்களாம். அல்வழியில் இயல்பாம்.

உ - ம். மண் + குடம் = மட்குடம்
பொன் + குடம் = பொற்குடம் } வேற்றுமை.

மண் + குறிது = மண்குறிது
பொன் + குறிது = பொன்குறிது } அல்வழி.

**174.** தனிக்குறிலணையாத ணகாரமும், னகாரமும் இரு வழியிலும் வந்த நகரந் திரிந்தபோது கெடும்.

உ-ம். தூண் + நன்று = தூணன்று.
பசுமண் + நன்மை = பசுமணன்மை.
கோன் + நல்லன் = கோனல்லன்.
செம்பொன் + நன்மை = செம்பொனன்மை.

**175.** லகர, ளகரங்கள் வல்லினம் வந்தால் வேற்றுமையில் றகர டகரங்களாம். அல்வழியில் இயல்பாம்.

உ-ம். கல் + சட்டி = கற்சட்டி
முள் + குறை = முட்குறை } வேற்றுமை.
கல் + குறிது = கல்குறிது
முள் + குறிது = முள்குறிது } அல்வழி.

**176.** லகர ளகரங்களுக்கு முன் மெல்லெழுத்துக்கள் வந்தால் இரு வழியிலும் னகர ணகரங்களாகத் திரியும்.

உ-ம். கல் + மலை = கன்மலை.
கல் + மறைந்தது = கல்மறைந்தது.
எள் + நெய் = எண்ணெய்.
வேள் + மாண்டனன் = வேண் மாண்டனன்.

**177.** அல்வழியில் தனிக் குற்றெழுத்தைச் சேராத லகர ளகரங்கள் வருமொழி முதலில் இருந்த தகரம், றகர டகரங்களாகத் திரியும்போது கெடும்.

உ-ம். தோன்றல் + தீயன் = தோன்றறீயன்.
வேள் + தீயன் = வேடீயன்.

**178.** அல்வழியிலும் வேற்றுமையிலும் தனிக் குற்றெழுத்தைச் சாராத லகர ளகரங்கள், வருமொழி முதல் நகரம், னகர ணகரங்களாகத் திரியும்போது கெடும்.

உ-ம். தோன்றல் + நல்லன் = தோன்றனல்லன்
வேள் + நல்லன் = வேணல்லன் } அல்வழி.
தோன்றல் + நன்மை = தோன்றனம்மை
வேள் + நன்மை = வேணம்மை } வேற்றுமை.

**179.** ணகர லகரங்களுக்கு முன்னே தகர நகரங்கள் வந்தால் அவை முறையே டகர ணகரங்களாம்.

உ-ம். பொன் + தீது = பொன்றீது.
பொன் + நன்மை = பொன்னன்மை.
கல் + தீது = கற்றீது.
கல் + நன்று = கன்னன்று.

**180.** ணகர ளகரங்களுக்கு முன், தகர நகரங்கள் வந்தால், அவை முறையே டகர ணகரங்களாம்.

உ-ம். மண் + தீது = மண்டீது.
மண் + நன்று = மண்ணன்று.
முள் + தீது = முட்டீது.
முள் + நன்று = முண்ணன்று.

**181.** அல்வழியில் மகரத்தின் முன் வல்லினம் வந்தால் அதற்கு இனவெழுத்தாகத் திரியும்.

உ-ம். மரம் + குறிது = மரங்குறிது.
மரம் + சிறிது = மரஞ்சிறிது.
மரம் + தீது = மரந்தீது.

**182.** மகரம் அல்வழியிலும் வேற்றுமையிலும், உயிரும், மெல்லினமும், இடையினமும் வந்தாற் கெடும்.

உ-ம். வட்டம் + ஆழி = வட்டவாழி.
வட்டம் + நேமி = வட்டநேமி
வட்டம் + வளை = வட்டவளை } அல்வழி.

மரம் + அடி = மரவடி
மரம் + நார் = மரநார்
மரம் + வேர் = மரவேர் } வேற்றுமை.

**183.** மகரங் கெட்டு நின்றமொழிக்கு முன் வல்லினம் வந்தால் வல்லெழுத்துத் தோன்றும். (மகரங் கெடுவதற்கும் இதுவே விதி)

உ - ம். குளம் + கரை = குளக்கரை.

184. எல்லாம் என்னும் சொல் வேற்றுமை யுருபை யேற்கும்போது, மகரங் கெட்டு இடையில் அற்றுச் சாரியை பெற்று கடைசியில் உம் பெற்றுவரும்.

உ - ம். எல்லாவற்றையும்.
எல்லாவற்றாலும்.

185. மகரத்தை ஈற்றிலே யுடைய சொல்லோடு அத்து சாரியை சேரும்போது மகரமும், சாரியையிலுள்ள முதல் அகரமுங் கெடும்.

உ - ம். மரம் + அத்து + குறை = மரத்துக்குறை.

186. அன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், ஏ, ஐ, கு, ன், ஆம் இப்பன்னிரண்டும் பிறவும் சாரியைகளாம்.

உ - ம். உண்டனன், பசுவினெய், வளையல், எல்லாவற்றிலும், பதிற்றுப்பத்து, மரத்துக்கிளை, புளியங்காய், கலனேகுறுணி, பண்டைநாள், உய்குவாய், கோன், மண்ணாங்கட்டி.

187. அஃறிணைப் பெயர் அன்மொழியாகியும் ஆகு பெயராகியும் உயர்திணையை யுணர்த்தின் வலி இயல்பாம்.

உ - ம். பொற்றொடி + கை = பொற்றொடி கை.
அரசு + கை = அரசு கை.

புணரியல் முற்றிற்று.

---

## பெயரியல்—ON NOUNS

188. சொல்லென்பது இருதிணை ஐம்பாற் பொருள்களை மூன்றிடத்திலும் வெளிப்படையாகவேனும் குறிப்பாகவேனும் உணர்த்துவது.

### சொற்களின் வகை—Parts of Speech

189. சொற்கள்—பெயர்ச் சொல், வினைச் சொல், இடைச் சொல், உரிச் சொல் என நான்கு வகைப்படும்.

உ-ம். மண், மரம்—பெயர்ச் சொல்.
வா, நட—வினைச்சொல்.
மற்று, ஏ—இடைச் சொல்.
சால, ஊறு—உரிச் சொல்.

190. தமிழுக்கு உரிய இந் நான்கு வகைச்சொற்களை யுந் தவிர, திசைச் சொல், வடசொல்லெனத் தமிழில் வந்து வழங்கும் சொற்கள் இருவகைப்படும்.

## திசைச் சொல்—Provincial Words

191. செந்தமிழ் வழங்காத மற்ற நாடுகளிலிருந்து வந்து நம் தமிழில் வழங்கும் சொற்களைத் திசைச் சொல் என் பார்கள்.

தாயைத் தள்ளை யென்பதும், தந்தையை அச்சனென்ப தும், முதலியன திசைச் சொல்.

## வட சொல்—Sanskrit Words

192. சமஸ்கிருத பாஷையிலிருந்து நம் தமிழில் வந்து வழங்கும் சொற்கள் வட சொற்களாம்.

யானையைக் குஞ்சரமென்பதும், முயற்சியைப் பிரயத்தன மென்பதும் இன்னும் பிறவும் வட சொற்களாம்.

193. அவை தற்சமம், தற்பவம் என இருவகைப்படும்.

194. தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இந்த இரண்டு பாஷைகளுக்கும் பொது வெழுத்துக்களால் ஆக்கப்பட்டு சமஸ்கிருத உச்சரிப்பே பெற்று வருவன தற்சமமாம்,

உ-ம். கமலம், காரணம்.

195. சமஸ்கிருதச் சொற்கள், தமிழிற்குரிய சிறப் பெழுத்துக்களினாலேனும், பொதுவும் சிறப்புமாகிய இரண்டு வித எழுத்துக்களினாலேனும் ஆக்கப்பட்டுத் தமிழ் உச்சரிப்பே பெற்றுவரின் அவை தற்பவ மெனப்படும்.

உ-ம். சுத்தம், சலம்.

## திணை—Kind

**196.** திணை—உயர்திணை அஃறிணை என இருவகைப் படும்.

திணை=குலம், ஜாதி. உயர்திணை=உயர்வாகிய ஜாதி. அஃது அல்லாத திணை அஃறிணை.

**197.** மனிதர், தேவர், நரகர் இம்மூவகையோரும் உயர்திணையெனப்படும்.

**198.** விலங்கு, கல் முதலிய உயிருள்ள பொருள்களும் உயிரில்லாத பொருள்களும் அஃறிணையெனப்படும்,

**199.** மனிதருடைய உடம்பையும் உயிரையும் பிரித்தால் அவையும் அஃறிணையாம்.

## பால்—Gender

**200.** பால்—ஆண்பால், பெண்பால், பலர்பால் ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து வகைப்படும்,

உ-ம். அவன், அரசன்—ஆண்பால்.
அவள், அரசி—பெண்பால்.
அவர், அரசர்—பலர்பால்.
அது, பசு—ஒன்றன்பால்.
அவை, பசுக்கள்—பலவின்பால்.

**201.** ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய இம்மூன்றும் உயர்திணைக்குரியன.

**202.** ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய இவ்விரண்டும் அஃறிணைக்குரியன.

**203.** கடவுளை உயர்திணையாகவும் அஃறிணையாகவும் சொல்லலாம்.

உ-ம். சுவாமி வந்தார், சுவாமி வந்தது.

**204.** ஆணும் பெண்ணும் அல்லாது பேட்டை, ஆடவர்களுக்குரிய உறுப்பு மிகுந்திருந்தால் ஆணாகவும், பெண்களுக்குரிய உறுப்புகள் மிகுந்திருந்தால் பெண்ணாகவும் சொல்லலாம். அப்போது அது முறையே பேடன் என்றும் பேடி என்றும் சொல்லப்படும்.

## இடம்—Person

**206.** இடம்—தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்று வகைப்படும்.

உ - ம். நான், நாம், நாங்கள்—தன்மை.
நீ, நீர், நீங்கள்—முன்னிலை.
அவன், அவள், அவர், அது, அவை—படர்க்கை.

## எண்—Number

**206.** எண்—ஒருமை, பன்மை என இரண்டு வகைப்படும்.

உ - ம். அது, அரசன்—ஒருமை.
அவை, அரசர்—பன்மை.

## இயற்சொல்லும் திரிசொல்லும்—Common and classical Words

**207.** தமிழ்ப்பாஷைக்குரிய நான்கு வகையாகிய சொற்களில் உரிச்சொல்லெல்லாம் திரிசொல்லாதலின் அவை நீங்கலாக, மற்ற மூன்றில் ஒவ்வொன்றும் தனித்தனியே இயற்சொல். திரிசொல் என இருவகைப்படும். எனவே அவை, பெயரியற்சொல், பெயர்த்திரிசொல்; வினையியற்சொல், வினைத்திரிசொல், இடையியற்சொல், இடைத் திரிசொல், உரித்திரிசொல் என எழுவகைப்படும்.

சில இலக்கண நூலார் கருத்தின்படி உரிச்சொற்களிலும் இயற்சொல் உண்டு.

உ - ம். அன்பு, அழகு.

## இயற்சொல் — Common Words

**208.** இயற்சொல்லாவது இயற்கையாய் யாவருக்கும் எளிதில் பொருள் விளங்குஞ் சொல்லாம்.

உ - ம். மண், பொன், மரம்—பெயரியற்சொல்.
வா, போ, நட—வினையியற்சொல்.
வீட்டை, வீட்டில் (ஐ, இல்) இடையியற்சொல்.

## திரிசொல்—Classical Words

**209.** திரிசொல்லாவது ஒரு பொருளைக் குறித்து வருகின்ற பல சொற்களாகியும் பல பொருள்களைக் குறித்து வருகின்ற ஒரு சொல்லாகியும் கற்றோர்களால் பொருளறியப்படுஞ் சொல்லாம்.

உ - ம். கிள்ளை, சுகம், தத்தை—இவை கிளியென்ற ஒரு பொருள் குறித்த பலபெயர்த் திரிசொல்.

வாரணம்—இது யானை, கோழி, சங்கு முதலியபலபொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல்.

படர்ந்தான், ஏகினான், சென்றான்—இவை போயினான் என்னும் ஒரு பொருள் குறித்த பலவினைத் திரிசொல்.

வரைந்தான்—இது நீக்கினான், கொண்டான், எழுதினான் என்ற பலபொருள் குறித்த ஒருவினைத் திரிசொல்.

இது, இயற்சொல்லினின்றும் திரிந்த சொல்லாதலின் இதைத் திரிசொல் என்பர்.

இடைத் திரிசொல்லிற்கு உதாரணம் இடையியலிற் கண்டுகொள்க.

## வழக்கு—Usage

**210.** வழக்கு—இயல்பு வழக்கு, தகுதி வழக்கு, என இருவகைப்படும்.

## இயல்பு வழக்கு—**Natural Usage.**

**211.** இயல்பு வழக்கு என்பது ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொல்லால் அப் பொருளைக் கூறுவது. இது இலக்கணமுடையது, இலக்கணப் போலி, மரூஉ என மூன்று வகைப்படும்.

## இலக்கணமுடையது—**Grammatical Form.**

**212.** இலக்கணமுடையது என்பது தோன்றுதொட்டு வழங்கி வருகின்ற இலக்கண நெறியால் வருவது.

உ - ம். நீலம், நீர், மண், கல்.

## இலக்கணப்போலி—**Apparent Grammatical Form.**

**213.** இலக்கணப் போலியாவது இலக்கணத்திற்கு ஒத்திராவிட்டாலும் இலக்கணமுடையதுபோல வருவது.

உ - ம். இல் முன் என்பது முன்றில் எனவும், நகர்ப்புறம் என்பது புறநகர் எனவும், கடைப்புறம் என்பது புறக்கடை எனவும் மாறி வரும்.

முன்னே எழுத்தியலிற் கூறியது எழுத்துப் போலி, இங்குக் கூறியது இலக்கணப் போலி. இதற்கும் அதற்குமுள்ள வேறுபாட்டை மாணுக்கர்கள் ஆராய்ந்து அறிக.

## மரூஉ—**Corrupt form.**

**214.** மரூஉ என்பது இலக்கணத்தினின்றும் மாறுபட்டு, சொல்லின் உருவமே கெட்டு நின்றதாயினும் ஆன்றோர் ஆட்சியைப் பெற்று வருகிறது.

உ - ம். அருமருந்தன்ன பிள்ளை—அருமந்த பிள்ளை.
ஆயிற்று—ஆச்சு.
தஞ்சாவூர்—தஞ்சை.

## தகுதி வழக்கு—**Appropriate Usage.**

**215.** தகுதி வழக்காவது ஒரு பொருளுக்கு இயற்கையாக அமைந்த சொல்லை ஒழித்து, தகுதியாகிய வேறு சொல்

லால் அப்பொருளை மறைத்துக் கூறுவது. அது இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூன்று வகைப்படும்.

## இடக்கரடக்கல்—Decent Form.

**216.** இடக்கரடக்கலாவது சொல்லத்தகாத வார்த்தையை மறுத்துக் கூறுதல், அவ்வாறு மறைத்துக் கூறுவிடில் அது அருவருப்புச் சுவையை உண்டாக்கும்.

உ - ம். கால்கழுவி வந்தேன். பவ்வீ

## மங்கலம்—Euphemistic Form.

**217.** மங்கலமாவது அமங்கலமாகிய சொல்லை மறைத்து மங்கலமாகிய சொல்லாற்கூறுவது. அவ்வாறு மறைத்துக் கூறுவிடில் அது அவலச் சுவையை உண்டாக்கும்

உ - ம். நன்காடு, (சுடுகாடு) தாலி பெருகிற்று.

## குழூஉக்குறி— Conventional Form.

**218.** குழூஉக் குறியாவது ஒரு கூட்டத்தார் ஏதேனும் ஒரு காரணத்தால் ஒரு பொருளினது சொற்குறிப்பை ஒழித்து வேறொரு சொல்லால் அப்பொருளைக்' கூறுவது. தாம் சொல்லுவதைப் பிறர் அறியாமலிருப்பதற்காக இவ்வாறு கூறுவர்.

உ - ம். சொல்விளம்பி (கள்) பறி (பொன்.)

**219.** சொல் பொருளை உணர்த்து மிடத்து குறிப்பாக வேனும் வெளிப்படையாக வேனும் உணர்த்தும்.

## குறிப்பு—Implied Words.

**220.** அவற்றுள் குறிப்பு—ஒன்றொழி பொதுச்சொல், விகாரம், தகுதி, ஆகுபெயர், அன்மொழித்தொகை, வினைக் குறிப்பு, முதற்குறிப்பு, தொகைக்குறிப்பு, பிற குறிப்பு எனப் பலவகைப்படும். இவை யல்லாத மற்றவையெல்லாம் வெளிப் படையாம்.

உ - ம். ஒன்றேழி பொதுச்சொல்—ஆயிரமக்கள் போர் செய்தார்; இதில் மக்கள் என்னும் பொதுப்பெயரும், செய்தார் என்னும் பொது வினையும், போர் என்னுங் குறிப்பால் உயர்திணைப் பெண்பாலை ஒழித்து ஆண்பாலைக் காட்டின.

விகாரம்—மரை மலர், இதில் மரை என்னுஞ் சொல், மலர், என்னும் குறிப்பினால் தாமரையைக் காட்டிற்று. இது முதற் குறை என்னும் விகாரம்.

தகுதி—திருமுகம் படித்தான், இதில் திருமுகம் என்னும் சொல், படித்தான் என்னும் குறிப்பினால் ஓலை யென்பதைக் காட்டிற்று.

ஆகுபெயர்—புளி தின்றான், இதில் புளி என்னும் சொல் தின்றான் என்ற குறிப்பினால் அம்மரத்தின் பழத்தை உணர்த்திற்று.

அன்மொழித் தொகை—தேன் மொழி சொன்னாள், இதில் தேன்மொழி யென்னும் சொல், சொன்னாள் என்னும் குறிப்பினால் தேன் போலும் இனிய மொழியையுடைய பெண்ணை உணர்த்திற்று.

வினைக் குறிப்பு—இவன் இப்பொழுது பொன்னன், இதில் பொன்னன் என்னும் சொல், இப்பொழுது என்னும் குறிப்பினால் பெயர்ப் பொருளை ஒழித்து பொன்னையுடையவனாயிருக்கின்றான் என்னும் வினைக்குறிப்பைக் காட்டி நின்றது.

முதற் குறிப்பு—ஆத்திசூடி படித்தான், இதில் ஆத்திசூடி என்னும் சொற்கள், படித்தான் என்னும் குறிப்பினால் அச் சொற்களை முதலிலேயுடைய ஓர் நூலைக் காட்டின.

தொகைக் குறிப்பு—ஐவரோடு குந்தி வந்தாள், இதில் ஐவர் என்னும் சொல், குந்தி என்னும் குறிப்பினால் பாண்டவர்களைக் காட்டி நின்றது.

பிற குறிப்பு—கல்லைக் கடிக்க நன்றாய்ச் சமைத்தாய், பாயா வேங்கை பறவாக் கொக்கு, என்பவற்றில், கல்லைக்கடிக்க என்

னும் சொற்குறிப்பால், நன்ருகச் சமைக்கவில்லையென்பதும் பாயா என்னும் குறிப்பால் வேங்கைமரமென்பதும், பறவா, என்னும் குறிப்பால் குதிரை என்பதும் தெரிவிக்கப் பட்டன.

**221.** ஒருவன், ஒருத்தி என்னும் பெயரேயன்றி இரண்டு, மூன்று முதலான எண்கள் காரணமாக ஆண்பாற் பெயரும் பெண்பாற் பெயரும் வாமாட்டா.

**222.** ஒருவர் என்னும்சொய் உயர்திணை. ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக பன்மை வினையைக் கொள்ளும்.

உ - ம். ஆடவருள் ஒருவர் அறத்தின் வழி நிற்பார்.
பெண்டிருள் ஒருவர் கொழுநன் வழி நிற்பார்.

**223.** து, வை என்னும் விகுதிகளைப் பெருத அஃறிணைப் பெயாகள் அத்திணையில் இரண்டு பால்களுக்கும் பொதுவாம். அவை பால்பகா வஃறிணைப் பெயர் என்று சொல்லப்படும்.

உ - ம்.

| | |
|---|---|
| குதிரை வந்தது<br>மரம் வளர்ந்தது | ஒருமை. |
| குதிரை வந்தன<br>மரம் வளர்ந்தன | பன்மை. |

**224.** பெயர்கள் இயற்பெயரென்றும் ஆகுபெயர் என்றும் இருவகைப்படும். இயற்பெயாவது ஒரு பொருளுக்கு இயல்பாக அமைந்துள்ள பெயராம்.

## ஆகுபெயர்—Metonomy and Synecdoche.

**225.** பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், நான்கு வகையான அளவு, சொல், தானி, கருவி, காரியம், கருத்தன் இவை முதலான பெயர்களுள் ஒரு பொருளின் இயற்பெயர் அப்பொருளுக்குச் சம்பந்தமுடைய மற்ருெரு பொருளுக்குப் பழைய வழியால் ஆகிவருமாளுல் ஆகுபெய

ரெனப்படும். கருவி, காரணமென்பன ஒருபொருட் சொற்கள்.

உ-ம். தாமரை போன்ற முகம்—பொருளாகு பெயர்.
(இதனை முதலாகுபெயர் என்றும் சொல்லுவர்.)
ஊர் அடங்கிற்று—இடவாகுபெயர்.
காரறுத்தான்—காலவாகுபெயர்.
வெற்றிலைநட்டான்—சினையாகுபெயர்.
வெள்ளை வந்தது—குணவாகுபெயர்.
வற்றலுண்டான்—தொழிலாகுபெயர்.
காலாலேநடந்தான்—எண்ணலளவை ஆகுபெயர்
இப்புளிவீசை—எடுத்தலளவை ஆகுபெயர்.
நாழியுடைந்தது—முகத்தலளவை ஆகுபெயர்.
வீடு ஐம்பதடி—நீட்டலளவை ஆகுபெயர்.
அவன்சொல்லை அறிந்தான்—சொல்லாகுபெயர்
விளக்கு ஒடிந்தது—தானியாகு பெயர்.
திருவாசகம்—காரணவாகுபெயர்.
இந்நூலலங்காரம்—காரியவாகுபெயர்.
திருவள்ளுவர்படித்தான்—கர்த்தாவாகுபெயர்.
வெற்றிலைநட்டான்—அடையடுத்தவாகுபெயர்.

## வேற்றுமைகள்—Cases

**226.** வேற்றுமையாவது தன்னை யேற்ற பெயர்ச் சொற்களின் பொருளை வேறுபடுத்துவதாம். அது முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றும் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறும் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எட்டு வகைப்படும்.

## முதல் வேற்றுமை—Nominative Case

**227.** முதல் வேற்றுமையாவது ஐ, ஆல், கு, இன், அது, இல் என்னும் உருபுகளை ஏற்றுத் திரிபில்லாமலிருக்கிற

பெயராம். இதனை எழுவாய் வேற்றுமை யென்றும், பெயர் வேற்றுமை யென்றும் சொல்லுவது உண்டு. இது வினையையும் பெயரையும் வினாவையும் கொண்டு முடியும். இதனை வினை முதல் என்றும், கருத்தாவென்றும், செய்பவ னென்றும் சொல்லலாம்.

உ-ம். சாத்தன் வந்தான்—வினை கொண்டது.
பசு வொன்று—பெயர் கொண்டது.
அவன் யார்—வினாக்கொண்டது.

## இரண்டாம் வேற்றுமை—Accusative Case

**228.** இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்பதாம். அதன் பொருள் ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை முதலியனவாம். இதனை செய்பொருள் வேற்றுமை யென்றும், கரும வேற்றுமை யென்றும் சொல்லுவதுண்டு.

உ-ம். குடத்தைச் செய்தான்—ஆக்கப்படு பொருள்.
வீட்டை யிடித்தான்—அழிக்கப்படு பொருள்.
ஊரை யடைதல்—அடைதல் பொருள்.
மனைவியை விட்டான்—நீக்கப் பொருள்,
புலியை ஒத்தான்—ஒத்தல் பொருள்.
பொன்னை யுடையான்—உடைமைப் பொருள்.

## மூன்றும் வேற்றுமை—Instrumental Case

**229.** மூன்றும் வேற்றுமையின் உருபு ஆல், ஓடு, ஒடு, என்பவைகளாம். அவற்றின் பொருள், கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி என்பவைகளாம். இதனைக் கருவி வேற்றுமை யென்றும் சொல்லுவார்கள்.

**230.** கருவி—முதற் கருவி, துணைக் கருவி என இரு வகைப்படும்.

(1) முதற் கருவியாவது செயப்படு பொருளோடு ஒற்றுமை யுடையதாய், செயப்படு பொருளுக்கு இன்றியமை யாததாய் தானே செயப்படு பொருளாவதாயுள்ளது.

உ - ம். மண்ணாற் செய்த குடம்.

(2) துணைக் கருவியாவது—முதற் கருவி காரியப்படு மளவும் அதற்குத் துணையாய் உடனின்று உதவுவது.

உ - ம். தண்ட சக்கரங்களாற் செய்த குடம்.

**231.** கருத்தா—இயற்றுதற் கருத்தா, ஏவுதற் கருத்தா என இரண்டு வகைப்படும்.

(1) இயற்றுதற் கருத்தாவாவது கருவியைத் தொழிற் படுத்துவது. (2) ஏவுதற் கருத்தாவாவது இயற்றுதற் கருத்தா வின் தொழிலை யுண்டாக்கும் தொழிலையுடையது.

உ - ம். தச்சனாலாகிய கோவில்—இயற்றுதற் கருத்தா.
அரசனாலாகிய கோவில்—ஏவுதற் கருத்தா.

முதல் வேற்றுமைக் கருத்தாவிற்கும் மூன்றும் வேற்றுமைக் கருத்தாவிற்குமுள்ள வேறுபாடு :—

(1) முதல் வேற்றுமைக் கருத்தா தன் விகுதி வினை யைக் கொண்டு முடியும். மூன்றும் வேற்றுமைக் கருத்தா செயப்படுபொருள் விகுதி வினையைக்கொண்டு முடியும்.

(2) முதல் வேற்றுமைக் கருத்தா செய்வினைப் பிர யோகத்திலிருக்கும். மூன்றும் வேற்றுமைக் கருத்தா செயப் பாட்டு வினைப் பிரயோகத்திலிருக்கும்.

**232.** உடனிகழ்ச்சிப் பொருளாவது வினை கொண்டு முடியும் பொருளின் தொழிலைத் தன்னிடத்தும் உடனிகழ்வ தாகவுடைய பொருளாம்.

உ - ம். தகப்பனேடு மகன் வந்தான்—உடனிகழ்ச்சிப் பொருள்.

## நான்காம் வேற்றுமை—**Dative Case**

**233.** நான்காம்வேற்றுமையின் யுருபு கு என்பதாம். அதன் பொருள் கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை முதலியனவாம். இதனைக் கொள்வோன் அல்லது கோளி வேற்றுமை யென்றும் சொல்லலாம்.

உ-ம். யாசகர்க்குப் பொன்னைக் கொடுத்தான்—கொடை.
பாம்புக்குப் பகை கருடன்—பகை.
சாத்தனுக்குச் சிநேகிதன் கொற்றன்—நேர்ச்சி.
ஆபரணம் அரசர்க்குரியது—தகுதி.
கடுக்கனுக்குப் பொன்—அதுவாதல்.
கூலிக்கு வேலை செய்தான்—பொருட்டு.
அவனுக்கு இவன் மகன்—முறை.

## ஐந்தாம் வேற்றுமை—**Ablative Case**

**234.** ஐந்தாம் வேற்றுமையினுடைய உருபு இன், இல் என்பனவாம். அவைகளின் பொருள் நீங்கற் பொருள், ஒப்புப் பொருள், எல்லைப் பொருள், ஏதுப் பொருள் முதலியனவாம். இதனை நீக்க வேற்றுமை என்று சொல்லுவார்கள்.

உ-ம். மலையின் வீழருவி—நீங்கல்.
காக்கையிற் கரிது களம்பழம்—ஒப்பு.
மதுரையின் வடக்குச் சிதம்பரம்—எல்லை.
கல்வியிற் பெரியவன் கம்பன்—ஏது.

## ஆறும் வேற்றுமை—**Genitive or Possessive Case**

**235.** ஆறும் வேற்றுமையின் உருபு அது, ஆது, அ, உடைய என்பவைகளாம். அவற்றின் பொருள் பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவினீட்டம், திரிபினாக்கம் ஆகிய ஐந்து தற்கிழமைப் பொருளும், பொருள், இடம், காலம் என்ற மூன்று பிறிதின்கிழமைப் பொருள்களுமாம்.

இதனை உடைமை அல்லது குறை வேற்றுமை என்றும் சொல்லுவார்கள்.

| | | |
|---|---|---|
| உ-ம். | சாத்தனது கருமை— | குணப்பண்புத் தற்கிழமை |
| | சாத்தனது வரவு— | தொழிற் ,, |
| | சாத்தனது கை— | உறுப்புத் ,, |
| | மனிதரது கூட்டம்— | ஒன்றன் கூட்டத் ,, |
| | படைகளது தொகுதி— | பலவினீட்டத் ,, |
| | நெல்லினது பொரி— | திரிபிலுக்கத் ,, |
| | சாத்தனது பசு— | பொருட் பிறிதின் கிழமை |
| | சாத்தனது வீடு— | இடப் ,, ,, |
| | சாத்தனது நாள்— | காலப் ,, ,, |

தனதுகை, என்வீடு, அவனுடைய பொருள் என வரும்.

இதுவன்றி, எனதுயிர் என் உடைமை, உடையதும் வேறாகாத ஒற்றுமைப் பொருளிலும் வரும். இது ஒற்றுமைத் தற்கிழமை. கபிலரது அகவல் என்பதுபோல் ஒருவரால் செய்யப்பட்டதென்ற பொருளிலும் வரும். இது செய்யுட் கிழமை யெனப்படும்.

## ஏழாம் வேற்றுமை—Locative Case

**236.** ஏழாம் வேற்றுமையின் உருபு—இல், கண் முதலியனவாம். அவ்வுருபின் பொருள், பொருள் முதலாகிய ஆறும், தற்கிழமை, பிறிதின்கிழமை இவ்விரண்டிற்கும் இடமாய் நிற்றலாம். இது இடவேற்றுமை யென்று சொல்லப் படும்.

உதாரணம்

| | | |
|---|---|---|
| மணியில் ஒளி | —தற்கிழமை | பொருள் இடமாயிற்று. |
| பனையில் அன்றில் | —பிறிதின் கிழமை | |
| ஊரில் வீடு | —தற்கிழமை | இடம் இடமாயிற்று. |
| ஆகாயத்திற் பருந்து | —பிறிதின் கிழமை | |

| | | |
|---|---|---|
| நாளில் நாழிகை | —தற்கிழமை | காலம் இடமாயிற்று |
| சித்திரையில் பாதிரி பூத்தது | —பிறிதின் கிழமை | |
| கையில் விரல் | —தற்கிழமை | உறுப்பு இடமாயிற்று |
| கையில் மோதிரம் | —பிறிதின் கிழமை | |
| கறுப்பில் அழகு | —தற்கிழமை | பண்பு இடமாயிற்று. |
| இளமையிற் செல்வம் | —பிறிதின் கிழமை | |
| ஆட்டத்தில் அபிநயம் | —தற்கிழமை | தொழில் இடமாயிற்று |
| ஆட்டத்திற் பாட்டு | —பிறிதின் கிழமை | |

ஏழாம் வேற்றுமை இடப்பொருளுருபு காலப்பொருள் பயப்பதாகவும் வருவதுண்டு.

உ - ம். இராமன் படிக்கையில் கொற்றன் சென்றான்.

இங்கே படிக்கையில் என்பதற்கு படிக்கும்போது என்பது பொருள்.

## எட்டாம் வேற்றுமை—Vocative Case

**237.** எட்டாம் வேற்றுமையின் உருபுகள் விளியடைந்த பெயரினுடைய ஈறுதிரிதலும், கெடுதலும், மிகுதலும், ஈற்றயலெழுத்துத்திரிதலும், இயல்பாதலும் முதலியனவாம். அவற்றின் பொருள் படர்க்கையோரை முன்னிலையாக்கி அழைத்தலாம். இதனை விளி வேற்றுமை என்பார்.

உ - ம். அம்மை—அம்மா—ஈறு திரிதல்.
அரசன்—அரச—ஈறு திரிதல்
மகன்—மகனே—ஈறு மிகுதல்.
மக்கள்—மக்காள்—ஈற்றயலெழுத்துத் திரிதல்.

**238.** ஐகாரத்தை இறுதியிலேயுடைய பொதுப் பெயரின் ஈறு ஆ, ஆய் எனத் திரிந்து வரும்.

**239.** இவ்வைகாரம் சில விடங்களில் ஏகாரமாகத் திரிந்து வருதலுமுண்டு.

உ - ம். அன்னை—அன்னே!

**240.** உயர்திணை, அஃறிணைப் பெயர்களின் இறுதியிலே உள்ள ஐகாரம் ஆய் எனத் திரிந்து வரும்.

உ - ம். நங்கை—நங்காய்! நாரை—நாராய்!

**241.** னகர வீற்றுப் பெயர்களில் ஈறு கெடுதலும், ஈற்றெழுத்துக் கெட்டு அயல் நீளுதலும், அதனோடு ஓகாரம் மிகுதலும், ஏகாரம் மிகுதலும், இயல்பாதலும், அதனோடு ஏகாரம் மிகுதலும், ஈறுகெட்டு அயல் அகரம் ஏகாரமாதலும் விளியுருபாம்.

உ - ம். அப்ப!
அப்பா!
அப்பாவோ!
ஐயாவே!
அப்பன்!
அப்பனே!
ஐயே!

**242.** சமீபத்திலுள்ளவர்களை அழைக்கும்போது இயல்பாகவும், ஈற்றெழுத்துக் கெட்டும், சேய்மையில் ஈறு நீளுதலும், ஈற்றெழுத்துக் கெட்டு அயல் நீளுதலும் ஆம்.

உ - ம். தம்பி! அப்ப!—அண்மைவிளி.
தம்பீ! அப்பா—சேய்மைவிளி.

**243.** தன்மை முன்னிலைப் பெயர்களும், சுட்டுப் பெயரும், தான், தாம் என்னும் பொதுப் பேயரும் விளிக்கப்படாவாம்.

**244.** தான், தாம் என்னும் படர்க்கைப் பெயர்கள் ஐ முதலிய ஆறுருபுகளையும் ஏற்கும்போது முறையே தன், தம் எனவும்; யான், யாம், நாம், என்னும் தன்மைப் பெயர்கள் என், எம், நம் எனவும், நீ, நீர் என்னும் முன்னிலைப்

பெயர்கள் நின், உன் நம், உம் எனவும் விகாரப்பட்டு, குவ்வுருபு ஒன்றில் மட்டும் அகரச்சாரியை பெற்று வரும்.

உ - ம். தன்னை, தன்னால், தனக்கு, தன்னின் தனது, தன்னில், தம்மை, தமக்கு எனவும்; என்னை, எனக்கு, எம்மை, எமக்கு, நம்மை நமக்கு, எனவும்; நும்மை, நுமக்கு, உம்மை, உமக்கு எனவும் வரும்

**245.** நான் என்னும் சொல் எழுவாய் ஒன்றையே ஏற்கும்.

உ - ம். நான் கண்டேன்.

**246.** எல்லைப் பொருளில் வரும் இன்னுருபும் ஆறும் வேற்றுமை யுருபும் பெயரையும், இவையல்லாத வேற்றுமைகள் வினையையும், நான்கனுருபும் ஏழனுருபும் வினையொடு பொருந்தி வரும் பெயரையுங் கொண்டு முடியும்.

உ - ம். சென்னையின் வடக்குத் திருவொற்றியூர்<br>அவனது கை. } பெயர் முடிபு.

பசு வந்தது.<br>வீட்டைக் காட்டினான்.<br>பிரம்பா லடித்தான்.<br>அவனுக்குக் கொடுத்தான்.<br>ஊரின் நீங்கினான்.<br>பாயிற் படுத்தான்.<br>மயிலே வா. } வினை முடிபு.

நோய்க்குக் கொடுக்கும் மருந்து.<br>மலையிலுள்ள மருந்து. } பெயர் முடிபு.

**247.** வேற்றுமைகள் வினைகொண்டு முடியிற் காரகம் எனப்படும்.

வீட்டை இடித்தான்—இரண்டாம் வேற்றுமை காரகம்<br>வாளால் வெட்டினான்—மூன்றாம் ,,<br>அரசனுக்குக் கொடுத்தான்—நான்காம் ,,

மலையினின்றிறங்கினான்—ஐந்தாம் வேற்றுமை காரகம்
காட்டின்கட் சென்றான்—ஏழாம்.

"இந்திரன் தாமரையைக் கரத்தாற்கொய் திறைவனுக்குத் தந்து இருங் குற்றத்தினீங்கி விண்மே விருந்தான்" இஃது ஒருங்கே வந்த காரகம்.

பெயரியல் முற்றிற்று.

---

## வினையியல்—ON VERBS

### வினைச்சொல்—**Verbs**

**248.** வினைச்சொல்லாவது பொருளின் புடைபெயர்ச்சியாகிய தொழிலை உணர்த்துவதாம்.

### செயப்படுபொருள் குன்றா வினை—**Transitive Verbs.**

**249.** அது செய்பவன் கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் இந்த ஆறையும் காட்டும் இது செயப்படு பொருள் குன்றாவினையாம்.

உ-ம். வனைந்தான்.

இது குயவனாகிய செய்பவனும், மண்ணாகிய முதற்கருவியும் தண்டமும் சக்கரமுமாகிய துணைக்கருவிகளும், வனைதற்கு ஆதாரமாகிய இடமும், வனைதலாகிய தொழிலும், இறந்த காலமும், குடமாகிய செயப்படு பொருளும் ஆகிய இவற்றையும் கொடுத்தது காண்க.

### செயப்படுபொருள் குன்றிய வினை—**Intransitive Verbs**

**250.** செயப்படுபொருள் குன்றிய வினையாயின், அச் செயப்படுபொருள் ஒழிந்த ஐந்தையுமே காட்டும்.

உ-ம். இருந்தான்—இதில் செயப்படு பொருளொழிந்த மற்றவற்றைக் காண்க.

**251.** முற்றுவினைச்சொல்லிற் பகுதியாற் செயலும் இடைநிலையால் காலமும், விகுதியாற் செய்பவனும், எச்ச,

வினைச் சொற்களில் பகுதியார் செயலும், இடைநிலையாற் காலமும் வெளிப்படையாகவும், மற்றவை குறிப்பாகவும்வரும்.

உ-ம். உண்டான், நடந்தான்.
உண்டு, உண்ட.

**252.** வினை—தெரிநிலை, குறிப்பு என இரண்டு வகைப்படும்.

## தெரிநிலை வினை—Definite Verb.

**253.** தெரிநிலை வினையாவது செயலும், காலமும் வெளிப்படையாகத் தெரிய வருவது.

உ-ம் வந்தான்.

**254.** தெரிநிலை வினை—தன் வினை, பிறவினை என்றும் செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படு பொருள் குன்றாவினை யென்றும், செய்வினை, செயப்பாட்டு வினை யென்றும் அறுவகைப்படும்.

**255.** மேலே கூறிய அறுவகை வினைகளில் ஒவ்வொன்றும் முதனிலை, தொழிற்பெயர், வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் என ஐந்து வகைப்படும்.

உதாரணம்

தன்வினை—உண், உண்ணல், உண்டின், உண்டு, உண்ட
பிறவினை—உண்பி, உண்பித்தல், உண்பித்தான், உண்பித்து, உண்பித்த,
செயப்படு பொருள் குன்றியவினை—நட, நடத்தல், நடந்தான், நடந்து, நடந்த.
செயப்படு பொருள் குன்றாவினை—தன்வினைக்குக் கொடுத்த உதாரணங்களே.
செய்வினை—தன்வினை உதாரணங்களே.
செயப்பாட்டு வினை—உண்ணப்படு, உண்ணப் படல், உண்ணப்பட்டது, உண்ணப்பட்டு, உண்ணப்பட்ட,

எனவே தெரிநிலை வினை விகற்பம் முப்பதாதல் காண்க.

**256.** முதனிலை முதலாக மேலே கூறிய வினையின் பகுப்பு ஐந்தனுள் முதனிலை யொழிந்த மற்றைய நான்கும் உடன்பாடும் எதிர்மறையும் என இரண்டிரண்டு வகைப்படும்.

உதாரணம்.

*தன்வினை உடன்பாடு—உண்ணல், உண்டான், உண்டு, உண்ட.*
*தன்வினை எதிர் மறை—உண்ணாமை, உண்ணாள், உண்ணாமல், உண்ணாத.*
*பிறவினை உடன்பாடு—உண்பித்தல், உண்பித்தாள். உண்பித்தான், உண்பித்த.*
*பிறவினை எதிர் மறை—உண்பியாமை, உண்பியான், உண்பியாமல், உண்பியாத.*
*மற்ற உதாரணங்களையும் இவ்வாறே கண்டு கொள்க.*

## செய்வினை—Active Verbs

**257.** தன்வினை, பிறவினை, செயப்படு பொருள் குன்றிய வினை, செயப்படு பொருள் குன்றாவினை இந்நான்கும் செய்வினையேயாம்.

## செயப்பாட்டு வினை—Passive Verbs

**258.** செயப்படு பொருள் குன்றிய வினை யொழிந்த மற்ற மூவகை வினைப்பகுதியோடு இடையே அகரச்சாரியை வரப்படும் விகுதி சேர்ந்தால் செயப்பாட்டு வினையாம்

உதாரணம்.

*தன்வினை உடன்பாடு—உண்ணப்படு, உண்ணப்படுதல், உண்ணப்பட்டான், உண்ணப்பட்டு, உண்ணப்பட்ட.*
*தன்வினை எதிர்மறை—உண்ணப்படாமை, உண்ணப்படான், உண்ணப்படாமல், உண்ணப்படாத.*
*பிறவினை உடன்பாடு—உண்பிக்கப்படு, உண்பிக்கப்படுதல், உண்பிக்கப்பட்டான், உண்பிக்கப்பட்டு, உண்பிக்கப்பட்ட.*

பிறவினை எதிர்மறை—உண்பிக்கப்படாமை, உண்பிக்கப் படான், உண்பிக்கப்படாமல், உண்பிக்கப்படாத. மற்றவற்றையும் இவ்வாறே காண்க.

**259.** சில வினைச் சொற்கள் பொதுவினையாக வரும்.

(1) தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவினை.

உ-ம். தேற்றிக் கொடுத்தான்.

(2) செயப்படுபொருள் குன்றியவினைக்கும், குன்றா வினைக்கும் பொதுவினை.

உ-ம். வெளுத்தான்.

(3) விதிவினைக்கும் மறைவினைக்கும் பொதுவினை.

உ-ம். செய்யாய்.

(4) செய்வினைக்கும் செயப்பாட்டு வினைக்கும் பொதுவினை

உ-ம். விண்ட கமலம், விண்ட காய்.

## முற்றுவினை—Finite Verbs

**260.** அன், ஆன் என்னும் விகுதிகளை இறுதியிலே யுடைய வினைச்சொற்கள், உயர்திணை யாண்பாற் படர்க்கை வினைமுற்றும் குறிப்பு வினை முற்றுமாம்.

உ-ம். நடந்தனன், நடந்தான்—தெரிநிலை.
குழையன், குழையான்—குறிப்பு.

**261.** அள், ஆள் என்னும் விகுதிகளை இறுதியிலே யுடைய வினைச்சொற்கள், உயர்திணைப் பெண்பால் படர்க்கை வினை முற்றும், குறிப்பு வினைமுற்றுமாம்.

உ-ம். நடந்தனள், நடந்தாள்—தெரிநிலை.
குழையள், குழையாள்—குறிப்பு.

**262.** அர், ஆர் என்னும் விகுதிகளை இறுதியிலே யுடைய வினைச்சொற்கள் உயர்திணைப் பலர்பால் படர்க்கை வினை முற்றும், குறிப்பு வினைமுற்றுமாம்.

உ-ம். நடந்தனர், நடந்தார்—தெரிநிலை.
குழையர், குழையார்—குறிப்பு.

**263.** *து, று என்னும் விகுதிகளை இறுதியிலே யுடைய வினைச் சொற்கள் அஃறிணை யொன்றன்பாற் படர்க்கை வினை முற்றும் குறிப்பு வினைமுற்றுமாம்.*

உ-ம். வந்தது, ஆயிற்று—தெரிநிலை.
குழையது, அற்று—குறிப்பு.

**264.** *அ என்னும் விகுதியை இறுதியிலேயுடைய வினைச்சொற்கள் அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை வினை முற்றும் குறிப்பு வினைமுற்றுமாம்.*

உ-ம். வந்தன, சென்றன—தெரிநிலை
புதியன, கரியன—குறிப்பு.

**265.** *ஆ என்னும் விகுதியை இறுதியிலேயுடைய வினைச்சொற்கள், அஃறிணைப் படர்க்கைப் பன்மை எதிர்மறை வினைமுற்றுக்களாம்.*

உ-ம். நடவா, செய்யா.

**266.** *தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, முதலியனவும், வேறு, இல்லை, உண்டு என்னும் குறிப்பு வினைமுற்றுக்களும் வினையெச்சம், பெயரெச்சமாகிய இவைகளும் இருதிணைக்கும் பொதுவாம்.*

**267.** *ஏன் என்னும் விகுதி தன்மை யொருமைத் தெரிநிலை வினைமுற்றிலும், குறிப்பு வினைமுற்றிலும் வரும்.*

உ-ம். நடந்தேன், குழையேன்.

**268.** *ஓம் என்னும் விகுதி தன்மைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்றிலும், குறிப்பு வினைமுற்றிலும் வரும்.*

உ-ம். நடப்போம், தாரிஞேம்.

**269.** ஏம், ஆம் என்னும் விகுதிகள் செய்யுளில் தன்மைப் பன்மை வினைமுற்றைக் காட்ட வரும்.

உ-ம், வந்தேம்; வந்தாம்.
தாரினேம், தாரினும்.

**270.** ஐ, ஆய் என்னும் விகுதிகளை இறுதியிலேயுடைய வினைமுற்றுக்கள், முன்னிலை ஒருமைத் தெரிநிலை வினைமுற்றுக்கும் குறிப்பு முற்றுக்கும் வரும்.

உ-ம். நடந்தனை, நடந்தாய்.
குறியை, குறியாய்.

**271.** ஈர் என்னும் விகுதியை இறுதியிலேயுடைய வினைச்சொற்கள் முன்னிலைப் பன்மைத் தெரிநிலை வினைமுற்றுக்கும், குறிப்பு வினைமுற்றுக்கும் வரும்.

உ-ம். வந்தீர், குழையீர்.

**272.** தன்மையோடு முன்னிலையையாவது படர்க்கையையாவது அவ்விரண்டையுமாவது சேர்த்து ஒரு வினைகொண்டு முடிக்கும்போது ஓம் விகுதியால் முடிக்க.

உ-ம். நானும் நீயும் போனோம்.
நானும் அவனும் போனோம்.
நானும் நீயும் அவனும் போனோம்.

**273.** முன்னிலையோடு படர்க்கையைச் சேர்த்து முடிக்கும்போது முன்னிலைக்குரிய ஈர் என்னும் விகுதியால் முடிக்க.

உ-ம். நீயும் அவனும் போனீர்.

**274.** ஆய், இ விகுதிகள் ஏவலொருமைக்கும், உம், ஈர், மின் விகுதிகள் ஏவற்பன்மைக்கும் எதிர்காலத்தைக் காட்டி வரும்.

உ-ம். உண்ணாய், செய்தி, உண்ணும், உண்ணீர், உண்மின்

**275.** ஏவலொருமையில் விகுதி குன்றியும் வரும்.

உ-ம். உண், காண், பார்.

**276.** க, இ, என்னும் எதிர்காலங் காட்டும் இரு விகுதிகளையும் ஈற்றிலுடைய வினைமுற்று, வியங்கோள் வினைமுற்றாம், அது மூன்றிடத்தும் ஐம்பாலிலும் செல்லும்.

உ-ம் யான் வாழ்க, யாம் வாழ்க, நீ வாழ்க, நீர் வாழ்க, அவன் வாழ்க, அவள் வாழ்க, அவர் வாழ்க, அதுவாழ்க, அவை வாழ்க, யான் வாழி, யாம் வாழி, நீ வாழி, நீர் வாழி, அவன் வாழி, அவள் வாழி அவர் வாழி, அது வாழி, அவை வாழி.

**277.** உயர்திணைச் சொல்லையும் அஃறிணைச் சொல்லையும் எண்ணி, ஒரு வினை கொண்டு முடிக்கும்போது, உயர்திணைப் பலர்பால் வினைமுற்றுக் கொண்டு முடிக்க.

உ. ம். சாத்தனும் குதிரையும் போனார்கள்.

**278.** உயர்திணைத் தன்மைச் சொல்லோடு அஃறிணையைக்கொண்டு முடிக்கும்போது முன்னிலைப்பன்மை வினைமுற்றால் முடிக்கவேண்டும்.

உ-ம். நீயும் குதிரையும் போனீர்கள்.

**279.** அ, உம் என்னும் விகுதிகளை இறுதியிலுடையதாய், காலமும் செயலும் தோன்றிப் பாலுடனே, செய்பவன் கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் என்கிற ஆறும் ஒழிய நிற்பது பெயரெச்சமாம்.

உ-ம்.
உண்ட / உண்கிற / உண்ணும் } இராமன்—செய்பவன்.

உண்ட / உண்கின்ற / உண்ணும் } கலம்—கருவி,

உண்ட / உண்கின்ற / உண்ணும் } வீடு—நிலம்

| | |
|---|---|
| உண்ட<br>உண்கின்ற<br>உண்ணும் | தொழில்—செயல். |
| உண்ட<br>உண்கின்ற<br>உண்ணும் | பகல்—காலம். |
| உண்ட<br>உண்கின்ற<br>உண்ணும் | சோறு—செயப்படுபொருள். |

பெயரெச்சங்கட்கு செய்பவன் கருவி முதலியன கொண்டு முடியும் சொல்லாக வந்தமை காண்க.

**280.** செய்யுமென்னும் பெயரெச்சம், படர்க்கை வினை முற்றாகவும் வரும்.

உ - ம். மழை வரும்.

**281.** செய்யுமென்னும் வினைமுற்றிற்கும் செய்யுமென்னும் பெயரெச்சத்திற்கும் இறுதியிலேயுள்ள உயிர்மெய் கெடுதலுமுண்டு.

உ - ம். குணமாகும்—குணமாம்.
சாவுங்குதிரை—சாங்குதிரை.

**282.** செய்யுமென்னும் ஏவற்பன்மை வினை முற்றின் இறுதியிலே உள்ள உயிர் மெய்யும் கெட்டு வரும்.

உ - ம். போம் பெரியோரே.

**283.** செய்து, செய், செயின் என்னும் வாய்பாட்டை அடைந்து, உ என்னும் விகுதியையும், காலங் காட்டுவன வாகிய ஆ, ய், அ, கு, இன், ஆல், கால் என்னும் இவ்வேழு விகுதிகளையும் ஈற்றில் உடையதாய்த் தொழிலையும் காலத்தையுந் தோன்றிப் பாலுடனே கொண்டு முடியும் வினையொழிந்து நிற்பது வினையெச்சமாம.

உ-ம் வந்து, ஓடி, போய். (செய்து என்னும் வாய்பாட்டின் இறந்தகால வினையெச்சம்.)

உண்ண, உண்ணற்கு (செய வென்னும் வாய்பாட்டின் நிகழ்கால வினையெச்சம்.)

உண்ணின், உண்டால், உண்டாக்கால். (செயின் என்னும் வாய்பாட்டின் எதிர்கால வினையெச்சம்.)

**284.** செய்தென்னும் வினையெச்சம் தன்வினை முதல் வினையைக் கொண்டு முடியும்.

உ-ம். உண்டு வந்தான்,

**285.** செய என்னும் வினையெச்சமும் செயினென்னும் வினையெச்சமும் தன்வினை முதல் வினையையும், வேறு வினை முதல் வினையையும் கொண்டு முடியும்.

உ-ம். அவனுண்ண வந்தான்.
அவன்வரப் பார்த்தேன்.
அவனுண்டால் வருவான்.
அவனுண்டாற் போவேன்.

**286.** செயவெனெச்சம் செய்தனெச்சமாகச் திரிந்தாலும் அதன் பொருள் திரியாது. இது எச்சத்திரிபு எனப்படும்.

உ-ம், நான் வந்து பொன்னன் போனான். (நான்வரப் பொன்னன் போனான் என்பது பொருள்.)

**287.** செய்யுமென்னும் முற்று உயர்திணைப் படர்க்கை யொருமைக்கும், அஃறிணைப் படர்க்கை யொருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் வரும்.

உ-ம். அவன் நடக்கும்.
அவள் நடக்கும்.
அது வரும்.
அவை வரும்.

## குறிப்புவினை—Indefinite Verbs.

**288.** பொருள் முதலிய ஆறன் அடியாகப் பிறந்த பெயர்கள் வினைகொண்டு முடியும் சொற்களுக்குப் பயனிலையாக நின்று குறிப்பாகக் காலத்தைக் காட்டுமானால் அவை குறிப்பு வினையாம்.

உ-ம். சாத்தான் உடையான், பொன்னையுடையான், அறிவாற் பெரியன், உனக்குள்ளான், உருவத்திற் சிறியன், காதிற் குழையன் எனவும்; வந்து பொன்னன், செய்தால் உரியன் முன்பு பொன்னன், இன்று பொன்னன், இனிப் பொன்னன் எனவும் வரும்.

**289.** அ, இய என்னும் விகுதிகளோடு பண்படி புணர்ந்து முடிந்து வருவது குறிப்புப் பெயரெச்சமாம்.

உ-ம். செய்ய குதிரை.
உள்ள மனிதன்.
கரிய மால்.
வலிய குதிரை.

**290.** பண்புச் சொல்லினடியாகத் தோன்றி அகர ஈறாக நின்று வினையைக்கொண்டு முடிவது குறிப்பு வினையெச்சமாம்.

உ-ம். மெல்லப் போனான்.
பையச் சென்றான்.
வலியச் சொன்னான்.

**291.** இல் என்னும் எதிர்மறைப் பண்படியோடு ஐ விகுதி புணர்ந்த வினை முற்றும், உள் என்னும் உடன்பாட்டுப் பண்படியோடு டுவ்விகுதி புணர்ந்த வினைமுற்றும் இருதிணையைம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாகிய வினை முற்றும்.

உ-ம். அவன், அவள், அவர், அது, அவை, நான், நாம், நீ, நீர்,—இல்லை—இது எதிர்மறைப் பொதுவினைக் குறிப்பு முற்று.

அவன், அவள், அவர், அது, அவை நான், நாம், நீர்—உண்டு. இது உடன்பாட்டுப் பொதுவினைக் குறிப்பு முற்று.

**292,** இல், உல் என்னும் பண்பு அடிகளோடு மூன்றிடத்தும் ஐம்பாற்கும் உரிய விகுதிகள் புணர்ந்தால் முறையே எதிர்மறைச் சிறப்பு வினைமுற்றும் உடன்பாட்டுச் சிறப்பு வினை முற்றுமாம்.

உ-ம். அவன் இலன், அவள் இலள், அவர் இலர், அஃது இன்று, அவை இல, நான் இலேன், நாம் இலோம், நீ இலாய், நீர் இலீர், எனவும்; அவன் உளன், அவள் உளள், அவர் உளர், அஃது உளது, அவை உள, நான் உளேன், நாம் உளோம், நீ உளாய், நீர் உளீர் எனவும் வரும்.

**293.** அல் என்பது இருதிணையைம்பால் மூவிடங்களுக்கும் உரிய விகுதிகளோடு சேர்ந்து எதிர்மறைச் சிறப்பு வினை முற்ருகவே வரும்.

உ-ம், அவன் அல்லன், அவள் அல்லள், அவ்ர் அல்லர், அஃது அன்று, அவை அல்ல, நான் அல்லேன், நாம் அல்லோம், நீ யல்லை, நீர் அல்லீர்.

**294.** குறிப்பில் இன்மையும் அன்மையும் என எதிர்மறை இருவகைப்படும்.

உ-ம். அஃது இல்லை, அஃது அன்று,

**295.** அல், இல் என்னும் எதிர்மறைப் பண்படிகள் ஆகாரச் சாரியையை இடையிற்பெற்று மல், மை, மே, து, என்னும் விகுதிகளோடு சேர்ந்தும் சாரியை யில்லாமல் றிவ்விகுதியோடு சேர்ந்தும் வந்தால் எதிர்மறைக்குறிப்புவினையெச்சமாம்.

உ-ம். அல்லாமல், இல்லாமல், அல்லாமை, இல்லாமை, அல்லாமே, இல்லாமே, அல்லாது, இல்லாது, அன்றி, இன்றி—வந்தான் என வரும்.

**296.** அல், இல் என்பவை இடையில் ஆகாரச்சாரி யையும், தகரவொற்று எழுத்துப்பேறும் பெற்று அகாவிகுதி யோடு புணரின் எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சமாம்.

உ-ம். அல்லாத குதிரை, இல்லாத குதிரை.

**297.** நட முதலிய பகுதிகள் எதிர்மறை ஆகார விகுதி பெற்று யாவும் ஒரு பகுதியாய் நின்று, மல், மே, து என்னும் விகுதிகளோடு சேர்ந்து வந்தால் எதிர்மறைத் தெரிநிலை வினை யெச்சமாம்.

உ-ம். நடவாமல் வந்தான்.
நடவாமே வந்தான்.
நடவாது வந்தான்.

**298.** நட முதலிய பகுதிகள் எதிர்மறையாகார விகுதி யைப் பெற்று இரண்டும் ஒரு பகுதியாகித் தகரவெழுத்துப் பேற்றோடு சேர்ந்த அகர விகுதியோடு புணர்ந்தால் எதிர் மறைத் தெரிநிலைப் பெயரெச்சமாம்.

உ-ம். நடவாத குதிரை.

**299.** எதிர்மறைக் குறிப்புப் பெய ரெச்சமும், எதிர் மறைத் தெரிநிலைப் பெயரெச்சமும் வினை யெச்சங்களும் ஈற்று உயிர் மெய் குறைந்து வரும். அவை முறையே ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், ஈறு கெட்ட எதிர்மறை வினை யெச்சம் எனப்படும்.

உ-ம். இல்லாக் குதிரை.
உண்ணாக் குதிரை.
இல்லாக் கிடந்தது.
உண்ணாக் கிடந்தது.

**300.** ஒரு எழுவாயோடு இரண்டு வினைமுற்றுக்கள் சேர்ந்தால் முதலில் இருக்கும் வினைமுற்றை வினை யெச்ச மாக்கிக் கொள்க. இதற்கு முற்றெச்ச மென்று பெயர்.

உ-ம். சாத்தன் உண்டான் போனான், இதற்கு சாத்தன் உண்டு போனான் என்பது பொருள்.

**301.** ஒரு பெயரோடு இரண்டு மூன்று பெயரெச்சங்கள் சேர்ந்து வந்தால் முதலிலுள்ள எச்சங்களை யெல்லாம் வினை யெச்சமாக்கிக்கொள்க.

உ-ம். வந்த உண்ட போன சாத்தன்—வந்து உண்டு போன சாத்தன்.

**302.** நட முதலிய பகுதிகள் இறந்த கால நிகழ்கால இடைநிலைகளோடு மாத்திரம் இல் என்பதைப் பெற்று எதிர் மறையைக் காட்டும்.

உ-ம். நடந்திலன், நடக்கின்றிலன்.

வினையியல் முற்றிற்று.

---

## பொதுவியல் — MISCELLANEOUS RULES.

**303.** இரண்டு திணைகளிலும் ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய பெயர்ச் சொற்களும் அப்படிப்பட்ட வினைச் சொற்களும் ஆண்பால் பெண்பால்களுள் ஒன்றைக் குறிப்பால் ஒழிக்கும்.

உ-ம். ஆயிர மக்கள் போர் செய்யப் போயினர்.

இதில் மக்கள் என்னும் உயர்திணை இருபாலுக்கு முரிய பொதுப் பெயரும், போயினர் என்னும் பொதுவினையும் போர் செய்ய என்னும் குறிப்பினால் பெண்பாலை ஒழித்தன.

பெருந்தேவி கருவுயிர்த்த கட்டிற்கீழ் நால்வர் மக்களுளர்.

இதில் மக்கள் என்னும் பொதுப் பெயரும் உளர் என்னும் பொது வினையும் கருவுயிர்த்த என்னும் குறிப்பினால் உயர்திணை யாண்பாலை யொழித்தன.

இப்பெற்றம் உழவொழிந்தன.

இதில் பெற்றம் என்னும் அஃறிணைப் பொதுப் பெயரும் ஒழிந்தன என்னும் பொதுவினையும் உழவு என்னும் குறிப்பினால் அஃறிணைப் பெண்பாலை ஒழித்தன.

இப்பெற்றம் பால் சொரிந்தன.

இதில் பெற்றம் என்னும் அஃறிணைப் பொதுப் பெயரும் சொரிந்தன என்னும் பொது வினையும் பால் என்னுங் குறிப்பி னால் அஃறிணை யாண்பாலை ஒழித்தன.

**304. திணை, பால், இடங்களுக்குப் பொதுவாகிய பெயர்வினைகளினுடைய பொதுத் தன்மையை மேலே வருகிற சிறப்புப் பெயரும் சிறப்புவினையும் நீக்கும்.**

**உ-ம்.** சாத்தன் இவன், சாத்தன் இது, சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது எனவும்; ஒருவர் என் தாயார், ஒருவர் என் தகப்பனார் எனவும்; மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன எனவும், பெயரின் திணைப் பொதுமையையும் பாற்பொதுமையையும் சிறப்புப் பெயர் வினைகள் வந்து நீக்கின.

அவரெல்லாம் இருந்தார், அவையெல்லா மிருந்தன, யா மெல்லாம் வருவோம், நீரெல்லாம் போமின் எனப் பெயரின் திணைப் பொதுமையையும் இடப்பொதுமையையும் சிறப்புப் பெயர் வினைகள் வந்து நீக்கின.

அவன், அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ, நீர்— வாழ்க என வினையின் திணை பால் இடப்பொதுமையினைச் சிறப்புப் பெயர்கள் வந்து நீக்கின. மற்றவைகளையும் சிறப்புச் சொல்லோடு சேர்த்துக்காண்க.

**305 பெயர் வினைகளில் ரகர வீற்றுச் சொல்லின் அயலில் இருக்கும் ஆகாரம் ஓகாரமாம்.**

உ-ம். நல்லோர்—நல்லோர்.
கொண்டார்—கொண்டோர்.

**306. செய்யுளில் ன, ள, ய ஈற்றுச் சொற்களின் அய லிலிருக்கும் ஆகாரம் ஓகாரமாக வரும்.**

உ-ம். வந்தான்—வந்தோன்.
செய்தான்—செய்தோன்.
வந்தாய்—வந்தோய்.

**307.** பல வேற்றுமை யுருபுகள் அடுக்கி வந்தாலும், வேறு பல வடுக்கிவந்தாலும், உருபு தொக்குவந்தாலும், வேறு பல வினையடுக்கி வந்தாலும் இறுதியில் ஒரு முடிக்கும் சொல்லைக் கொண்டு வரும்.

உ-ம். அரசன் பகைவனை வாளால் வெட்டினன்.
சாத்தனையுங் கொற்றனையும் வாழ்த்தினன்.
வாள்கைக் கொண்டான்.
ஆடினன் பாடினன் சாத்தன்.

**308.** வினைமுற்றும் வினையெச்சமும் முடிக்கும் சொல்லுக்கு முதலில் நிற்பது மல்லாமல் ஈற்றிலும் நிற்கும்.

உ-ம். வந்தான் சாத்தன்—சாத்தன் வந்தான்.
வந்துபோனன்—போனன்வந்து.

**309.** ஆறும் வேற்றுமையுருபொழிந்த ஐ, ஆல், கு, இன், இல் என்னும் ஐந்துருபுகளும் முடிக்கும் வினைக்கு ஈற்றிலும் வரும்.

உ-ம். குறைத்தான் மரத்தை.
வந்தான் கொற்றனல்.
கொடுத்தான் கொற்றனுக்கு.
நீங்கினன் ஊரின்.
போனன் வீட்டில்.

புத்தகம் சாத்தனது என ஈற்றில் வைத்துக் கூறினல் சாத்தனது என்பது குறிப்பு வினைமுற்ருகக் கருதப்படுமேயல்லாமல் ஆறும் வேற்றுமை யுருபாகக் கருதப்படமாட்டாது.

**310.** ஏதேனும் ஒரு சொல் வினை கொண்டு முடியும் போது அதனினத்தையும் தெரிவிக்கும்.

உ-ம். சோறுண்டான். இது கறி முதலியவைகளையும் உண்டான் என்று தன் இனத்தையும் காட்டியது.

நஞ்சுண்டவன்சாவான்—இதில் நஞ்சுண்டவன் என்னும் உயர்திணை ஆண்பாற் பெயர், உண்டவள், உண்டவர், உண்டது, உண்டன என்னும் உயர்திணைப் பெண்பால், பலர்பால் அஃறிணை ஒன்றன்பால், பலவின்பால் முதலியவைகளையும் தழுவி நின்றது.

**311.** பெயரெச்சம் வினையெச்சம், உம்மையெச்சம், சொல்லெச்சம், பிரிநிலையெச்சம், எனவெச்சம், ஒழியிசையெச்சம், எதிர்மறையெச்சம், இசையெச்சம், குறிப்பெச்சம் என்ற பத்து வகை எச்சமும் தன்னெச்சமாகிய பெயர் வினைகளைக்கொண்டு முடியும்.

உ-ம். செய்தான்—செயவெனச்சம்.
செய்துவந்தான்—செய்து என்னும் எச்சம்.
சாத்தனும் வந்தான்—உம்மை ,,
நல்லவனென்றான்—சொல் ,,
சாத்தனே கொண்டான்—பிரிநிலை ,,
கடல் ஒல்லென ஒலித்தது—எனவெச்சம்.
உணற்கோ வந்தான்—ஒழியிசை ,,
யானோசெய்தேன்—எதிர்மறை ,,
கற்றதனாலாய பயனென்கொல்—இசை ,,
கல்லைக் கடிக்க நன்றாய்ச் சமைத்தாய்—குறிப்பு,,

## தொகைநிலைத் தொடர்—Elliptical Compounds.

**312.** வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை, எனத் தொகை நிலைத் தொடர்மொழிகள் ஆறு வகைப்படும்.

**313.** ஐ முதலிய வேற்றுமை யுருபுகள் ஆறும் வெளிப்படாமல் தொக்க தொடர் மொழிகள் வேற்றுமைத் தொகையாம்.

உதாரணம்

நிலங் கடந்தான்—இரண்டாம் வேற்றுமைத் தொகை.
கல்லெறிந்தான்—மூன்றும் ,,
சாத்தன் மகன்—நான்காம் ,,
ஊர் நீங்கினுன்—ஐந்தாம் ,,
சாத்தன் கை—ஆறும் ,,
காட்டுப் புலி—ஏழாம் ,,

**314.** இவ் வேற்றுமைத் தொகைக்குள் உருபுகள் மாத்திரம் விரிந்தவிடத்துப் பொருட் பொருத்தமுருது நிற்குமாலுல் அதனைச் சேர்ப்பதற்கு மற்றும்சில சொற்கள் சேர்த்துக்கொள்ளப்படும். அவை உருபும் பயனுமுடன் தொக்க தொகை எனப் பெயர் பெறும்.

உ-ம். கைக்களிறு, கையைக் களிறு என விரிந்தும் பொருள் பொருந்தாமையிலுல் உடைய என்னும் சொல்லைச் சேர்க்க முடிந்தது. மற்றவையு மிப்படியே.

வினைத்தொகை—**An aorist of the relative participle.**

**315.** காலங்காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் ஒழியப் பகுதியளவாய் நின்று, பெயரை அவாவி நிற்பது வினைத் தொகையாம்

உ-ம். கொல் யானை, விடு கணை.

பண்புத்தொகை—**Ellipsis of adjectival sign.**

**316.** பண்புக்கும் பண்பிற்கும் இடையே அவற்றிற்கு உண்டாயிருக்கிற ஒற்றுமை நயத்தை விளக்கும், ஆகிய என்னும் பண்புருபு தொக்கு வருவது பண்புத்தொகையாம்.

**317.** இது, வண்ணம், வடிவு, அளவு, சுவை இவைகளால் நான்கு வகைப்படும்.

உதாரணம்

செந்தாமரை, கருங்குவளை—வண்ணப் பண்புத்தொகை.
வட்டக்கல், சதுரப்பலகை—வடிவுப் பண்புத்தொகை.

ஒருபொருள், ஏழுதுகில்—அளவுப் பண்புத்தொகை.
துவர்க்காய், இன்சொல்—சுவைப் பண்புத்தொகை.

**318.** ஒரு பொருளுக்குண்டா யிருக்கிற பொதுப்பெயருக்கும் சிறப்புப் பெயருக்கும் நடுவில் ஆகிய என்னும் உருபு தொக்க தொடர் இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும்.

உ - ம். சாரைப்பாம்பு, வைகையாறு, பனைமரம்.

### உவமைத் தொகை.

### Ellipsis of particles denoting comparison.

**319.** வினை, பயன், மெய், உரு என்னும் இவைகளைப் பற்றி வரும் உவமையுருபு தொக்க தொடர்மொழி உவமைத் தொகையாம்.

| | | |
|---|---|---|
| உ - ம். | குருவி கூப்பிட்டான் | வினையுவமைத் தொகை. |
| | கற்பகக்கை | பயனுவமைத் தொகை. |
| | உடுக்கையிடை | மெய்யுவமைத் தொகை. |
| | பவளவாய் | உருவுவமைத் தொகை. |

**320.** போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப இயைய முதலியன உருபுகளாம்.

### உம்மைத் தொகை—Ellipsis of the conjunction உம்.

**321.** இடையிலும் கடையிலும் உம்மைதொக்கசொற்களின் தொடர் உம்மைத் தொகையாம்.

**322.** இது, எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னுமிவற்றால் நான்கு வகைப்படும்.

| | | | |
|---|---|---|---|
| உ - ம். | ஒன்றேகால் | எண்ணலளவை | உம்மைத் தொகை. |
| | கழஞ்சேகால் | எடுத்தலளவை | |
| | கலனே தூணி | முகத்தலளவை | |
| | சாணரங்குலம் | நீட்டலளவை | |

## அன்மொழித்தொகை—Ellipsis of other words

## (The words having the finite verb suppressed.)

**323.** வேற்றுமைத் தொகை முதலிய ஐவகைத் தொகைக்கும் புறத்தில்வேறுமொழி தொக்குவருவது அன்மொழித் தொகையாம்.

உதாரணம்.

பூங்குழல்—இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

தாழ்குழல்—வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

கருங்குழல்—பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

துடியிடை—உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

உயிர்மெய்—உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

**324.** முன்மொழி, பின்மொழி, பன்மொழி, புறமொழி என்னும் நான்கு இடங்களிலும் பொருள் சிறந்து நிற்கும்.

உதாரணம்.

| | | |
|---|---|---|
| செந்தாமரை | முன்மொழியிற் பொருள் சிறந்தது. | |
| வெண்மதி | பின்மொழி | ,, |
| சேரசோழ பாண்டியர் | பன்மொழி | ,, |
| தேன்மொழி | புறமொழி | ,, |

**325.** உயர்திணை ஒருமையில் வரும் உம்மைத்தொகை ரகரவொற்றும் கள்ளீறுமாகிய பலர்பால் விகுதியையுடையதாய் வரும்.

உ-ம். கபில பரணர், தேவன் தேவிகள்.

**326.** *அஃறிணை யொருமையிலும் திணைப்பொது ஒருமையிலும் வருகிற உம்மைத்தொகை பன்மை விகுதியைப் பெற்றும் பெறுமலும் வரும்.*

உ-ம். ஆடு மாடு, ஆடு மாடுகள்.
தாய் தந்தையர், தாய் தந்தை.

**327.** *வேற்றுமை யுருபுகள் முதலியன தொக்கு நின்றவிடத்து பொருள்களினுலே மயங்குந் தன்மையையுடைய தொடர்மொழிகள் இரண்டு முதல் ஏழீருகிய பொருள்களால் மயங்கும்.*

உ-ம். தெய்வ் வணக்கம், என்பது தெய்வத்தை வணங்குகின்றவணக்கம், தெய்வத்திற்கு வணக்கம் என இரு பொருளால் மயங்கியது.

நீர் மோர், என்பது நீரையுடைய மோர், நீரோடு கூடிய மோர், நீரும் மோரும் என மூன்று பொருள்களாலே மயங்கியது.

சொல்லிலக்கணம், என்பது சொல்லின் இலக்கணம், சொற்கு இலக்கணம், சொல்லில் இலக்கணம், சொல்லிலக்கணஞ் சொன்ன நூல் எனநான்கு பொருள்களால் மயங்கியது.

பொன் மணி என்பது, பொன்னலாகிய மணி பொன்னுகிய மணி, பொன்னின்கண் மணி, பொன்னேடு சேர்ந்த மணி, பொன்னும் மணியும் என ஐந்து பொருள்களால் மயங்கியது.

மரவேலி என்பது மரத்தைக்காக்கின்ற வேலி, மரத்துக்கு வேலி, மரத்தினது வேலி, மரத்தின் புறத்து வேலி, மரத்தாலாகிய வேலி, மரமாகிய வேலி என் ஆறு பொருள்களால் மயங்கியது.

சொற்பொருள் என்பது, சொல்லால் அறியப்படுகிற பொருள் சொல்லினது பொருள், சொல்லுக்குப் பொருள், சொல்லின்கட் பொருள், சொல்லும் பொருளும், சொல்லாகிய பொருள் சொல்லானது பொருள் என ஏழுபொருள்களால் மயங்கியது.

## தொகாநிலைத் தொடர்—Non-elliptical Compounds.

**328.** *வினைமுற்று, பெயரெச்சம் வினையெச்சம், எழுவாய், விளி, வேற்றுமை யுருபுகள் விரிந்து நிற்கும் புணர்ச்சி,*

இடைச்சொல், உரிச்சொல், அடுக்குப்புணர்ச்சி ஆகிய இவ்வொன்பதும் தொகாநிலைத் தொடர்மொழிகளாம்.

உ-ம். நடந்தான் இராமன்—வினைமுற்றுத் தொடர்,
உண்ட குதிரை—பெயரெச்சத்தொடர்.
கண்டு வந்தான்—வினையெச்சத் தொடர்,
இராமன் வந்தான்—எழுவாய்த்தொடர்.
கொற்ற கொள்—விளித்தொடர்.
குடத்தைச் செய்தான்—2-ம் வேற்றுமைவிரி.
மற்றொன்று—இடைச்சொற்றொடர்.
நனி பேதை—உரிச்சொற்றொடர்.
பாம்பு பாம்பு—அடுக்குத்தொடர்.

## வழு - Ungrammatical Expressions.

**329.** திணை, பால், இடம், காலம், வினா, விடை, மரபு ஆகிய இவை மயங்கி வந்தால் வழுவாம்.

உ-ம். அவன் வந்தது—திணைவழு.
அவர் வந்தான்—பால்வழு.
யான் வந்தான்—இடவழு.
நாளைவந்தான்—காலவழு.
ஒருபொருளைக்காட்டி
சிறிதோ பெரிதோ என்பது—வினாவழு.
தில்லைக்குவழியாது என்றவனுக்கு } விடைவழு.
சிவப்புக்காளை 30-பணம் என்பது }
யானைமேய்ப்பானை இடையன் என்பது—மரபுவழு.

**330.** திணை ஐயத்தையும் பால் ஐயத்தையும் அதன் அதன் பொதுச் சொல்லாலும் துணிந்த பொருளின் மேல் அல்லாத தன்மையை வைத்தும் சொல்லுவார்கள்.

உ-ம். குற்றியோ மகனோ அவ்விடத்தே தோன்கிற உரு, எனத் திணையில் ஐயம் வந்தபோது, உரு என்னும் பொதுச்

சொல்லாலும், ஆண்மகனோ பெண்மகளோ அங்கே தோன்று கின்றவர் எனப் பாலில் ஐயம் வந்தபோது, தோன்றுகிறவர் என்ற பொதுச்சொல்லாலும் சொல்லுக.

துணிந்த பொருள் குற்றியாயின் மகனன்று, மகனயிற் குற்றியல்லன் என்றும் ஆண்மகனெனின் பெண்மகளல்லள், பெண்மகளெனின் ஆண்மகனல்லன் என்றும், ஒன்றெனிற் பலவன்று, பலவெனில் ஒன்றல்ல என்றும் சொல்லுக.

## வழுவமைதி—Anomalies.

**331.** மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, கோபம், இழிப்பு ஆகிய இவைகளாலும் பாலுந் திணையும் வழுவி வந்தாலும் குற்றமில்லை.

உ-ம். மகனை, என்னம்மை வந்தாள் என்பது மகிழ்ச்சியினல் ஆண்பால் பெண்பாயிற்று.

ஒருவனை, அவர் வந்தார் என்பது உயர்வினல் ஒருமைப் பால் பன்மைப் பாலாயிற்று.

தாதா உலகுக்கோர் தாயே என்பதில் சிறப்பினல் ஆண்பால் பெண்பாலாயிற்று.

கசையடி பெறுவீர்காளையரே என்பதில் கோபத்தால் ஒருமைப் பால் பன்மைப் பாலாயிற்று.

பெண்புத்தி கேட்பானை, இவன் பெண் என்பதில் இழிப்பினல் ஆண்பால் பெண்பாலாயிற்று.

**332.** பால்வழுவி வருதல் போல், திணை வழுவி வரின், அஃது திணை வழுவமைதியாம்.

உ-ம். ஒரு பசுவை என்னம்மைவந்தாள் என்பதில் மகிழ்ச்சியால் அஃறிணை உயர்திணையாயிற்று.

கிளியாரே என்பதில் உயர்வினல் அஃறிணை உயர்திணை யாயிற்று.

என் பிள்ளைகளே என் பொருள் என்பதில் சிறப்பினல் உயர்திணை அஃறிணையாயிற்று.

அவ்வுயிரால் யாது பயன் என்பதில் கோபத்தால் உயர்திணை அஃறிணையாயிற்று.

நாம் அரன் உடமை என்பதில் இழிப்பினல் உயர்திணை அஃறிணையாயிற்று.

## எண் வழுவமைதி.

**333.** ஒருமையிற் பன்மையும் பன்மையில் ஒருமையும் சிற்சில சமயங்களில் வரின் எண் வழுவமைதியாம்.

உ-ம். வெயிலெல்லாம் மறைத்தது மேகம், இரண்டு கண்ணும் சிவந்தது. என்பன ஒருமையிற் பன்மையும் பன்மையில் ஒருமையும் வந்தன.

## இடவழுவமைதி.

**334.** ஓரிடத்தில் பிறவிடச் சொல் வழுவமைதியாய் வரின் இடவழுவமைதியாம்.

உ-ம், சாத்தன் தாய் இங்ஙனஞ் செய்வேனே? சாத்தன் தாய் என்னும் படர்க்கை செய்வேனே என்னும் தன்மையின் வினையைத் தழுவியது.

## காலம் — Tenses.

**335.** இறப்பு, எதிர்வு, நிகழ்வு எனக் காலம் மூன்று வகைப்படும்.

**336.** மூன்று காலங்களிலும் தொழில் இடையருமல் நடக்கின்ற பொருளை நிகழ் காலத்தாலும் எதிர் காலத்தாலுஞ் சொல்லவேண்டும்,

உ-ம், தெய்வம் இருக்கிறது.
ஆறொழுகுகிறது.
அரசன் அழுகின்றான்.
தீச்சுடும்,

குதிரை கனைக்கும்.
நாய்குரைக்கும்.

## கால வழுவமைதி.

**337.** விரைவினாலும், மிகுதியினாலும், தெளிவினாலும், இயல்பினாலும் நிகழ்காலம் இறந்தகாலம் எதிர்காலங்களாகவும், எதிர்காலம் இறந்தகாலம் நிகழ்காலங்களாகவும், இறந்தகாலம் எதிர்காலம் நிகழ்காலங்களாகவும் வரும்.

உ-ம். இனி உண்ணப் போகும் ஒருவனை, உடன் அழைத்துச் செல்ல விரும்பின் ஒருவன், இன்னும் உண்டிலையோ? என்றால், உண்டேன் உண்டேன் என்று அவன் சொல்லுவதும், உண்கிறவன் அப்படிச் சொல்லுகிறதும் வழக்கம். ஆதலால் எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாயின. இவை விரைவு.

நீ அவனுடனே பகைத்தாற் செத்தாய், சாகிறாய். இந்தக் காட்டிற் போனால் துணி யிழந்தாய், இழக்கிறாய் என முறையே எதிர்காலம், இறந்தகாலமும் நிகழ்காலமுமாயிற்று. சாதலும், துணி யிழத்தலும் ஒருவேளை தவறினாலும் தவறும். ஆதலால் பெரும்பான்மை கருதிய மிகுதி என்று சொல்லப்படும்,

அறஞ் செய்தாற் சுவர்க்கம் புகுந்தான், புகுகிறான். எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறினால் மழைபெய்தது, பெய்கிறது. தெளிவினால் எதிர்காலம், இறந்தகாலமும் நிகழ்காலமுமாயிற்று.

யாம் பந்து விளையாடுவது இச் சோலை. விளையாடுகிறது இச்சோலை. இயல்பினால் இறந்தகாலம், எதிர்காலமும் நிகழ்காலமும் ஆயிற்று.

## வினா—Question.

**338.** அறிவு, அறியாமை, ஐயம், கோளல், கொடை, ஏவல் என வினா அறுவகைப்படும்.

உ-ம். ஆசிரியன் மாணாக்கனை இப்பாட்டுக்குப்பொருளென்னை எனக்கேட்பது அறிவினா.

மாணாக்கன் ஆசிரியனை இப்பாட்டுக்குப் பொருளென்னை? எனக் கேட்பது அறியாவினா.
குற்றியோ மகனோ? எனக் கேட்பது ஐயவினா.
பயறுண்டோ வணிகரே? எனக் கேட்பது கொளல்வினா.
சாத்தா, உனக்கு ஆடையில்லையோ? எனக் கேட்பது. கொடைவினா.
சாத்தா உண்டிலையோ? எனக் ககட்பது ஏவல்வினா.

## விடை—Answer

**339.** சுட்டு, மறை, நேர், ஏவல், வினாதல், உற்ற துரைத்தல், உறுவது கூறல், இன்மொழி என விடை எட்டு வகைப்படும்.

உ-ம். தில்லைக்கு வழியாதுஎனின் இதுஎன்பது சுட்டு விடை, சாத்தா இது செய்வாயா? என்றவனுக்கு,
செய்யேன் என்பது—மறைவிடை.
செய்வேன் என்பது—நேர்விடை.
நீசெய் என்பது—ஏவல் விடை.
செய்வேனோ என்பது—வினாவிடை.
தலைநொந்தது, நோகிறது என்பன—உற்றது கூறல்விடை.
தலைநோகும் என்பது—உறுவது கூறல்விடை.
மற்றொன்று செய்வேன் என்பது—இனவிடை.

## மரபு—Idiom

**340.** எந்தப் பொருளை எந்தச் சொல்லாற் பெரியோர்கள் கூறி வந்தார்களோ அப்படியே நாமும் சொல்லுதல் மரபு ஆம்.

உ-ம். பசுவின் கன்று, வாழைக்கன்று, குதிரைக்குட்டி, பாம்புக்குட்டி, அணிற்பிள்ளை, தென்னம்பிள்ளை, கிளிப்பிள்ளை, குருவிக்குஞ்சு என்பன மரபாம். பசுவின்குட்டி, குதிரைக் கன்று, அணிற்குட்டி என்பன குற்றமாம்.

**341.** எழுத்தின் தன்மை திரியாமல் பொருள் வேறு பட்ட தொடர்ச்சொற்கள், குறித்த சொல்லின் இறுதியும் முத

லுங் தோன்ற இசையறுத்துச் சொல்லுகிற வேறு பட்டால் துணிவு உண்டாகும்.

உ - ம். குறும்பரம்பு, செம்பொன் பதின்கழஞ்சு, இவற்றைகுறும்பரம்பு,குறும்பரெம்பு(குறும்பர் அம்பு) எனவும் செம்பொன் பதின்கழஞ்சு, செம் பொன்பதின் கழஞ்சு (செம்பு ஒன்பதின் கழஞ்சு) எனவும் இசையறுத்து உச்சரிக்க.

**342.** சுட்டுப் பெயர் வாக்கியத்திற்குப் பின்னே வரும்.

உ - ம். நம்பி வந்தான், அவனுக்குச் சோறிடு, எருது வந்தது, அதற்குய் புல்லிடு என வரும். மற்றப் பால்களிலும் இவ்வாறே காண்க.

**343.** விரைவு, சினம், உவகை, அச்சம், அவலம், மிகுதி, இப்பொருளைப் பற்றிச் சொற்கள் அடுக்காகத் தொடர்ந்து இரண்டு முதல் நான்கு வரையிலும் வரும். இது அடுக்குத்தொடராம்.

உ - ம். போபோ—விரைவு.
ஏறிஏறி—சினம்.
வருகவருக—உவகை.
பாம்புபாம்பு—அச்சம்
வாழேன்வாழேன்—அவலம்.
வந்துவந்துபோனான்—மிகுதி.

**344.** இவ்வளவென்று அறிந்த பொருளையும், எக்காலத்தும் எவ்விடத்திலும் இல்லாத பொருளையும், வினையோடு கூட்டிச் சொல்லும்போது முற்றும்மை வேண்டும்.

உ - ம். தமிழ்நாட்டு மூவரசரும் வந்தார், இறைவனுக்குக் கண் மூன்றும் முச்சுடர் எனவும்: முயற்கோடு எங்கிமில்லை, ஆகாயப் பூ என்று மில்லை எனவும் வரும்.

**345.** செயப்படுபொருளை செய்பவன் போல வைத்து அதன்மேல் வினைமுதல் வினையைச் சொல்லுதலே வழக்கத்திற் பெரும்பான்மையாம். இதுவே தமிழ் மரபு.

உ - ம். இம்மாடு யான் கொண்டது.
இச்சோறு யான் கொடுத்தது.

இவற்றிலுள்ள யான் என்பன வெல்லாம் மூன்றும் வேற்றுமைக் கருத்தாக்களாம்.

**346.** கருவி, நிலம், செயல் காலங்களையும் வினை முதல் போல வைத்துக் கூறுதலும் உண்டு.

உ - ம். இவ்வெழுத்தாணி யானெழுதியது.
இவ்வீடு யானிருந்தது.
இத்தொழில் யான் செய்தது.
இந்நாள் யான் பிறந்தது.

**347.** பொருள் முதலாகிய ஆறையும் அடையாகப் பெற்றுவருகிற சொற்கள் இனத்தைப் பெற்றிருப்பனவுமன்றி இனமில்லாதனவுமாம்.

| இனமுள்ளன. | இனமில்லாதன. | |
|---|---|---|
| நெய்க்குடம் | உப்பளம் | பொருள் |
| குளநெல் | ஊர்ச்சுவை | இடம் |
| கார்த்திகை விளக்கு | நாளரும்பு | காலம் |
| பூமரம் | சிலைமரம் | சினை |
| செந்தாமரை | வெண்மதி | குணம். |
| ஊதுகொம்பு | தோய்தயிர் | தொழில் |

**348.** இனமுள்ள அடைச்சொற்கள் பிறிதினியையு நீக்கிய விசேஷணங்கள் என்றும் இனமில்லாத அடைமொழிகள் இயைபின்மை நீக்கிய விசேஷணங்கள என்றும் பெயர் பெறும்.

**349.** ஒரு அடையும் ஒரு சினையும் ஒரு முதலையடுத்து ஒன்றை ஒன்று விசேஷித்து வருதலும், இரண்டு அடைச் சொற்கள் முதலை விசேஷித்து வருதலுமாம்.

உ - ம். வேற்கை முருகன.
செங்கால் நாரை.
சிறுகருங் காக்கை.

பொதுவியல் முற்றிற்று

## இடையியல்—ON PARTICLES.

**350.** இடைச் சொல்லாவது பெயர்ச்சொல், வினைச் சொற்களைப்போலத் தனித்து வாராமல் அவைகளைச் சார்ந்து பொருளை யுணர்த்திவரும் சொல்லாம்.

**351.** அவை ஐ முதலாகிய வேற்றுமை யுருபுகளும் அன், ஆன் முதலிய விகுதிகளும், சாரியைகளும், சுட்டும், வினாவும், பிறவழியால் வருவனவும் சொற்களாம்.

**352.** ஏகார இடைச்சொல் தேற்றத்திலும், பிரிநிலை யிலும், ஈற்றசையிலும் வரும்.

உ-ம். கடவுளே உயர்ந்தவர்—தேற்றம்.
அவனே கொண்டான்—பிரிநிலை.
நீயே கொண்டாய்—வினா.
வகுத்தனர் கொளலே—ஈற்றசை.

**353.** ஓகார இடைச்சொல் ஐயத்திலும் எதிர்மறை யிலும், வினாவிலும், சிறப்பிலும் வரும்.

உ-ம். குற்றியோ மகனோ—ஐயம்.
பசுவோ வந்தது—வினா.
அவனோ கொண்டான்—எதிர்மறை.
ஓ ஓ பெரியன்—உயர்வு சிறப்பு.
ஓ ஓ கொடியன்—இழிவு சிறப்பு.

**354.** உம்மை எதிர்மறையிலும், சிறப்பிலும், ஐயத்தி லும், எச்சத்திலும், முற்றிலும், எண்ணிலும் வரும்.

உதாரணம்.

| | |
|---|---|
| வருதற்கு முரியன் | எதிர்மறை |
| குறவரும்மருளுங்குன்று | உயர்வு சிறப்பு. |
| புலையனும் விரும்பாத யாக்கை | இழிவு சிறப்பு. |
| பத்தாயினும் எட்டாயினுங்கொடு | ஐயம். |
| சாத்தானும் வந்தான | எச்சம். |

எல்லாரும் வந்தார். முற்று
சாத்தானும் கொற்றனும் வந்தார் எண்.

**355.** மற்று என்பது பிறிதென்னும்பொருளில் வரும்.

உ-ம். அறஞ் செய்யத்தக்கது, மற்றது செய்யத் தகாதது.

**356.** முன், பின் என்பவை காலப் பொருளையும் இடப் பொருளையுந்தந்து ஏழாம் வேற்றுமைப் பொருளிலேயே வரும் இடைச் சொற்களாம்.

உ-ம். பின் பிறந்தான், முன் பிறந்தான்.
பின் உட்கார்ந்தான், முன் உட்கார்ந்தான்.

**357.** பின் என்பதொன்றும் மற்றென்றும் பொருளிலும் வரும்

உ-ம். அதை யன்றிப் பின் எதைச் செய்வேன.

பின், முன் என்பவை, பின்பு, முன்பு, பின்னை, முன்னை, பின்னர், முன்னர் எனவும், மற்று என்பது மற்றை எனவும் விகாரப்பட்டும் வரும்.

இடையியல் முற்றிற்று

---

## உரியியல்—ONQUALIFYING WORDS.

**358.** உரிச்சொல் என்பது குணத்தை யுணர்த்திப் பெயர் வினைகளுக்கு உரிமைபூண்டு செய்யுள் வழக்கத்தில் வழங்குஞ் சொல்லாம்.

உ-ம். நனி பேதை.
தவ உழைத்தான்.

**359.** சால, உறு, தவ, நனி, கூர், கழி, என்பன மிகுதி என்னும் ஒரு குணத்தை உணர்த்தும் உரிச் சொற்களாம்.

**360.** கடி என்பது காவல், கூர்மை, வாசனை, ஒளி, அச்சம், சிறப்பு, புதுமை, மிகுதி, விரைவு முதலிய பல குணத்தை உணர்த்தும் உரிச்சொல்லாம். (மற்றவைகளு மிப்படியே.)

**361.** இதில் சுருங்கச் சொல்லிய இலக்கணங்களையே ஏதுவாகக் கொண்டு சொல்லாதுவிட்ட மற்றவைகளையும் ஆராய்ந்து அறிந்துகொள்க.

உரியியல் முற்றிற்று

---

## சொற்றொடரியல்—SYNTAX.

**362.** சொற்றொடராவது பெயர் முதலிய சொற்கள் ஒருங்குபடத் தொடர்ந்து நிற்பது.

### வாக்கியம்—Sentence.

**363.** வாக்கியமாவது எழுவாயும் பயனிலையும், செய்படு பொருள் முதலியவைகளோடு கூடியேனும் கூடாதேனும் முடிவு பெற்று நிற்பதாம்.

உ - ம். பொன்னன் மரத்தை வெட்டினான்.

இது எழுவாயும் பயனிலையும் செயப்படுபொருளோடு கூடி முடிவு பெற்றது.

பொன்னன் வந்தான்.

இது எழுவாயும் பயனிலையும் செயப்படுபொருளோடு கூடாது முடிவு பெற்றது.

### எழுவாய்—Subject.

**364.** எழுவாயாவது வாக்கியத்தின் முதற் பொருளாம். எழுவாய் என்பது கர்த்தா.

உ - ம். பென்னன் வந்தான்.

இதில் பொன்னன் என்பது வாக்கியத்தின் முதற் பொருளாகிய எழுவாய்.

### பயனிலை—Predicate.

**365.** பயனிலையாவது வாக்கியத்தின் முதற் பொருளின் செயலைக் காண்பிப்பது.

மேல்வக்கியத்தில் வந்தான் என்பது வாக்கியத்தின் முதற் பொருளாகிய பொன்னனது செயலாகிய வருதலைக் காட்டி ற்று

## செயப்படு பொருள்—Object.

**366.** செயப்படு பொருளாவது *வினை முதற்றொழிற் பயனை உறுவது. இதனைச் செய்பொருளென்றும் கூறுவதுண்டு.*

உ - ம். *சாத்தன் புலியைக் கொன்றான்.*

*இவ்வாக்கியத்தில், சாத்தனாகிய வினைமுதலினது தொழிலாகிய கொல்லுதலின் வயனை யுறுவது புலியாதலிற் புலி செயப்படு பொருளாயிற்று.*

**367.** *வாக்கியத்தில் எழுவாய் தொக்கு வருவதும் உண்டு.*

உ - ம். வருகிறான்.

*இதில் அவன் என்னும் எழுவாய் தொக்குவந்தமை காண்க.*

**368.** *எழுவாயே யன்றிப்பயனிலை தொக்குவருவதும் முண்டு.*

உ - ம். இவர்களுக்குள் நல்லவன் எவன் ? என்ற கேள்விக்கு இராமன் என்ற விடையில், நல்லவன் என்னும் பயனிலை தொக்கு வந்தமை காண்க.

**369.** *எழுவாய்ஒன்றும் பலவும் ஒரே பயனிலையையும் பல பயனிலைகளையும் கொள்ளும். பல பயனிலைகளாகிய வினைகளிற் கடைசி மாத்திரம் முற்று வினையாம்.*

உ - ம். இவனும் அவனும் தோட்டத்தில் இருந்தார்கள், என்பதில் ஒரே பயனிலை கொண்டன.

அரசன் மந்திரியை அழைத்துக் காரியத்தை விசாரித்து உத்தரவு சொன்னான், என்பதில் ஒரே எழுவாய் மூன்று பயனிலைகளைக் கொண்டது.

**370.** *செய்வினைப் பயனிலை எழுவாயோடு திணை, பால், இடம் ஆகிய இவைகளில் மாறுபடாமல் இசைந்து நிற்கும்.*

உ - ம். அவன் வந்தான். அது வந்தது. நாம் வந்தோம்.
அவள் வந்தாள். அவை வந்தன. நீ வந்தாய்.
அவர் வந்தார். நான் வந்தேன். நீர் வந்தீர்.

## வாக்கியவகைகள்—Kinds of Sentences.

**371.** ஒரு எழுவாயும் ஒரு பயனிலையும்உடைய வாக்கியம் தனி வாக்கியம் எனப்படும். இதிலே செயப்படு பொருள் முதலிய மற்றைய வேற்றுமைச் சொற்கள் வந்தாலும் தனி வாக்கியமேயாம்.

உ-ம். இராமன் இலங்கைக்குச் சென்றான்.
இராமன் தன் கை வாளினால் இராவணனைக் கொன்றான்.

**372.** மேற்கூறிய தனி வாக்கியங்களை யடுத்துச் சில * அடை வாக்கியங்கள் வருமாயின் அது † கலப்பு வாக்கியம் எனப்படும்.

உ-ம், குடிகள் களிக்குமாறு நன்றாய் ஆள்பவன் யாவனோ அவனே அரசனென்னத் தக்கவன்.

**373.** பல தனி வாக்கியங்கள் கொண்டு வருவதும் தனி வாக்கியமும் கலப்பு வாக்கியமும் செறிந்து வருவதுமாகிய வாக்கியங்கள் ‡ தொடர் வாக்கியங்கள் எனப்படும்.

உ-ம். ஆலவாயில் வந்து அமுதவாயன் எனப் பெயர் பெற்றவனும், பழைய தமிழ் நூல்கள் பலவற்றிற்கு உரை வகுத்தவனும், நச்சினார்க்கினியன் என்னும் பெயருடையவனும் யாவனோ அவனைப் புகழ்ந்து பாடுவோமாக.

சொற்றொடரியல் முற்றிற்று.

மழவை-மகாலிங்க ஐயர் தமிழ் இலக்கணம் முற்றுப்பெற்றது.

---

* Subordinate Sentences. † Complex Sentences.
‡ Compound Sentences.

## பரீக்ஷை வினாக்கள்

1. முதலெழுத்துக்கள் எவை? சார்பெழுத்துக்கள் எத்தனை?

2. உயிர் மெய்க்குறில், குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆகிய இவைகளுக்கு மாத்திரை எத்தனை?

3. குற்றியலுகரம் என்றாலென்ன? அது எத்தனை வகைப்படும்? வகைக்கு இரண்டு உதாரணங்கள் எழுதுக.

4. எழுத்துக்கள் எச்சமயங்களில் தம் மாத்திரையின் அளவைக் கடந்து நீண்டு ஒலிக்கும்?

5. மொழிக்கு முன்னே வாராத மெய்யெழுத்துக்கள் எவை?

6. பன்னிரண்டு உயிரெழுத்துக்களோடும் சேர்ந்து மொழிக்கு முதலில் வரும் மெய்களவை?

7. வகர யகரங்கள் எந்தெந்த உயிரெழுத்துக்களோடு சேர்ந்து மொழிக்கு முதலில் வரும்?

8. போலி என்றாலென்ன? உதாரணம் கூறுக?

9. பதமென்றாலென்ன? அது எத்தனை வகைப்படும்?

10. பகுபதங்களின் உறுப்புகளெவை?

11. கேளாய், உண்டனன், நடந்தனன், நடக்கின்றிலன் இவற்றிற்கு உறுப்பிலக்கணந் தருக.

12. பெயர்ப் பகுபத இடைநிலைகளுக்கும், மற்ற இடைநிலைகளுக்கும் வேற்றுமை என்ன?

13. பெயரெச்ச விகுதிகள், வினையெச்ச விகுதிகள், எவை? பெயர்ப் பகுபதங்கள் எவ்வெவற்றைப் பகுதிகளாகப் பெற்று வரும்?

14. காலங்காட்டும் விகுதிகள் எவை ?

15. புணர்ச்சி என்றாலென்ன ? அப்புணர்ச்சி எத்தனை வகைப்படும் ?

16. அல்வழிப் புணர்ச்சி என்றாலென்ன ? அது எத்தனை வகைப்படும் ?

17. உடம்படு மெய்யென்றாலென்ன ?

18. குற்றிய லுகரத்திற்குமுன் உயிர் வந்தால் எவ்வாறு ஆகும் ?

19. மிடற்றொலி, ஆட்டுக்கால், வயிற்றுவலி இவற்றைப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறுக.

20. பல, சில என்னும் சொற்களின் முன் உயிர் வந்தால் எவ்வாறாகும் ?

21. ஓராயிரம், நாற்பது, எழுபணம், எண்ணாயிரம் இவற்றிற்கு புணர்ச்சிவிதி கூறுக.

22. சொல்லென்றாலென்ன ?

23. பால்கள் எத்தனை வகைப்படும் ? அஃறிணைக்குரிய பால்கள் எவை ?

24. வழக்கு என்றாலென்ன ? அது எத்தனை வகைப்படும் ?

25. ஆகு பெயருக்கும் அன்மொழித் தொகைக்குமுள்ள வேறுபாடென்னை ?

26. வேற்றுமை யுருபுகளைப் பெற்றுவாராத பெயர்கள் எவை ?

27. விளியேலாத பெயர்கள் எவை ?

28. தான், தாம் என்னும் பெயர்களும்; நீ, நீர் என்னும் பெயர்களும் வேற்றுமை யுருபுகளை ஏற்கும்போது எவ்வாறு வரும் ?

29. ஐந்து, ஆறு என்னும் வேற்றுமைகளின் உருபும் பொருளும் கூறுக.

30. வினைச் சொற்கள் எவ்வெவற்றைக்காட்டி நிற்கும்?

31. தெரிநிலை வினைக்கும் குறிப்பு வினைக்குமுள்ள வேற்றுமை என்ன?

32. அஃறிணை யொன்றன்பாற் படர்க்கை வினைமுற்றும் குறிப்பு வினைமுற்றும் இறுதியில் எவ்விகுதிகளைப் பெற்று வரும்?

33. ஏவல் வினைக்கும் வியங்கோள் வினைக்குமுள்ள வேறுபாடு என்ன?

34. ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவான வினைச் சொற்களெவை?

35. செய்வினையை செயப்பாட்டுவினை யாக்குவ தெங்ஙனம்?

36. வினையாலணையும் பெயர் என்றாலென்ன? இரண்டு உதாரணந் தந்து விளக்குக!

37. இடை நிலைகள் எத்தனை வகைப்படும்?

38. தன்வினைப் பகுதிகளைப் பிறவினைப் பகுதிகளாக்குவ தெப்படி? உதாரணம் கூறுக?

39. தொகைநிலைத் தொடர் மொழிகள் எத்தனை வகைப்படும்.

40. வினைத்தொகை என்றாலென்ன?

41. உவமைத்தொகை என்றாலென்ன? அது எத்தனை வகைப்படும்?

42. தொகைநிலைத் தொடர்களில் பொருள் சிறந்து நிற்குமிடங்கள் எவை? ஒவ்வோருதாரணம் கூறுக?

43. வழு என்றாலென்ன ? அது எத்தனை வகைப்படும்?

44. வினா எத்தனை வகைப்படும் ?

45. எவற்றிற்கு முற்றும்மைகொடுத்துக்கூறவேண்டும்?

46. பண்புத் தொகைகள் எத்தனை வகைப்படும் ?

47. பண்புத் தொகைக்கும் இருபெயரொட்டுப் பண்புத் தொகைக்குமுள்ள வேறுபாடென்ன ?

48. இடைச் சொற்கள் எத்தனை வகைப்படும் ?

49. ஏ, ஓ உணர்த்தும் பொருள்கள் எவை ?

50. உரிச்சொல்லாவது என்ன ?

51. மிகுதிப்பொருளை உணர்த்தும் உரிச்சொற்கள் எவை ?

52. சொற்றொடரென்றா லென்ன ?

53. வாக்கியத்தில் எவ்வெவற்றை அறிய வேண்டும் ?

54. எழுவாயென்றாலென்ன ?

---

The Guardian Press, Ltd., 158-B, Broadway, Madras.

Third Edition 2000 Copies—1936.

## Books Suitable for Lower Forms

முதல் மூன்று பாரங்களுக்குரியவை

| | | | |
|---|---|---|---|
| 1. | கோவலன் | | 0— 8—0 |
| 2. | மதுரை நாயக்க அரசர்கள் | | 0— 6—0 |
| 3. | திருவிளையாடல் சுருக்கம் | | 0—10—0 |
| 4. | ரகுநந்தனன் | | 0—12—0 |
| 5. | மீராபாய் | | 0—12—0 |
| 6. | இந்துதேச சரித்திரம் முதல் பாரத்திற்கு | | 0— 8—0 |
| 7. | இரண்டாம் பாரத்திற்கு | | 0—10—0 |
| 8. | மூன்றாம் பாரத்திற்கு | | 0—10—0 |
| 9. | நவீன ஆரம்ப கணிதம் I Form | | 0—12—0 |
| 10. | ஷை II Form | | 0—12—0 |
| 11. | ஷை III Form | | 0—12—0 |
| 12. | பிரத்யோதயன் | | 0— 6—0 |
| 13. | கதா கற்பகம் | மலர் 1 | 0— 6—0 |
| 14. | கதா கற்பகம் | மலர் 2 | 0— 7—0 |
| 15. | கதா கற்பகம் | மலர் 3 | 0— 8—0 |
| 16. | ரஜபுத்திர வீரர் | | 0— 6—0 |

வி. நா. சுவாமிநாதன், மதராஸ், மதுரை அன் திருநெல்வேலி